


மன்னிக்க
வேண்டுகிறேன்
காஞ்சனா ஜெயதிலகர்
மன்னிக்க
வேண்டுகிறேன்
காஞ்சனா ஜெயதிலகர்

## நூல் விவர அட்டவணை


| | |
|---|---|
| நூலின் பெயர் | : மன்னிக்க வேண்டுகிறேன்...! |
| ஆசிரியர் | : காஞ்சனா ஜெயதிலகர் |
| முதற் பதிப்பு | : நவம்பர், 2002 |
| இரண்டாம் பதிப்பு | : டிசம்பர், 2006 |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| மொத்தப் பக்கங்கள் | : 200 |
| அச்சு எழுத்து | : 10 புள்ளி |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை-14. |

**விலை ரூ. 60.00**

| | |
|---|---|
| அச்சிட்டோர் | : ஸ்ரீ.எம்.கிராபிக்ஸ்,<br>சென்னை-14. |

# மன்னிக்க வேண்டுகிறேன்...!

## உள்ளே


| | | |
|---|---|---|
| 1. | மன்னிக்க வேண்டுகிறேன்...! | 5 |
| 2. | நிழலில் ஒரு நிலவு | 98 |


# மன்னிக்க வேண்டுகிறேன்...!

## 1

ரயில் ஜன்னலின் விரலளவு தடித்த கறுப்பு கம்பிகளைப் பற்றியபடி வெளியே வெறித்தாள் லலிதா.

காட்சிகள்...ஏன் உலகமே பின்னோக்கி நழுவியது...

வேகமாய்... விருப்பமுடன்.

வாழ்க்கையையும் இப்படி பின்நோக்கி நகர்த்த முடியுமானால் எத்தனை சுகம், சௌகர்யம்?

இதோ எதிரே தாய் மடியில் அமர்ந்தபடி கையில் அகப்பட்டவைகளை எல்லாம் எச்சில் வடிய சப்பும் மழலை போல மாறிவிடலாம்.

தாயின் தாலி குண்டுகளின் ருசியில் அலுத்த குழந்தை வாயில் இட அடுத்ததாய் என்ன என்று துறுதுறுத்தது.

கபடோ கவலையோ அறியாத இதைப் போலாகி தாய் மடியில் தஞ்சமாகி விட வேணும்... அது கூடுமானால்...

இப்படி பயம் இருக்காது.

மற்றவர்களுக்கும் இளக்காரம் வராது.

தான் தாய் தகப்பனற்ற அனாதை என்பதால் தானே தில்வேஷ் தன்னிடம் அப்படி முறையின்றி நடந்து கொண்டான்?

முதுகுக்கு ஏதும் பாலிஷ் போடுவியா லலி? எப்படி இத்தனை வழுவழுன்னுது..?

எத்தனை உரிமையாய் தன் முதுகைத் தடவின அவன் விரல்கள்....? பின்னால் நின்றவன் குனிந்து கம்ப்யூட்டர் மௌஸை இயக்கியபடி இவள் கழுத்தில் மூச்சு விட்டான். முகர்ந்தான்.

அவன் சொரசொரப்பான கன்னங்கள் அவள் சருமத்தில் உரச..

ஐயோ.. எத்தனை அருவெறுப்பு.. அவமானம்.

இப்போதும் நினைப்பிலேயே உடம்பு கூசிக் குறுகுகின்றது.

தன்னை யாருமற்றவள் என்று பந்தாடுகிறார்கள் என்ற ஆத்திரம். இரும்புக் கம்பியை இறுகப் பிடித்தாள்.

"இந்தாம்மா, போளி எடுத்துக்கோ.."

எதிர் இருக்கையின் பெண்மணி சிறு வாழையிலை சதுரத்தில் போளியை வைத்து நீட்டினாள்.

"வேணாம்."

"இது செய்து எடுத்துக்கட்டு வந்ததில்லை... இப்ப ஸ்டேஷன்ல வாங்கினோம். எல்லோரும் சாப்பிடறோம் பார்."

"இருக்கட்டும்.. எனக்கு இனிப்புப் பிடிக்காது."

"அப்ப இந்தக் காராச்சேவு?"

தன் வாயில் இரண்டைப் போட்டு மென்றபடி இவளிடம் ஒரு சின்ன கூம்பு பொட்டலத்தை நீட்டினாள். அந்த அம்மாள்.

மறுப்பாய் தலையாட்டினாள் லலிதா.



"பிஸ்கட்ல மயக்க மருந்து கலந்து தர்றதுன்னுல்லாம் கேள்விப்படறோம். உலகத்துல என்னென்னவோ நடக்குதுதான். ஆனா பெரும்பாலும் மனுஷங்க நல்லவங்க.. ஒருத்தருக்கு ஒருத்தர் உதவணும் பேசிப் பழகணும்னு ஆசைப்படறவங்க.. நீ தனியேப் போறதால ஜாக்ரதையாய் இருக்கணும்னு நினைக்க றதுங்கறே.. அதானே?.. நானும் சாப்பிட்டேன் பாரு.. எடுத்துக் கோம்மா.."

சிநேகமாய் சிரித்தவளை வெறித்தாள் லலிதா.

புருஷன், மகன், மருமகள், பேத்தி என்று பூரணமாய் பயணிப்பவளுக்கு பயணம் மட்டுமல்ல வாழ்க்கையே இனிது.. பாதுகாப்பான பெருமிதம்தான்.

நன்கு போர்த்தியிருப்பவர்களுக்கு குளிரும் காற்றும் உறைக்காதே ..

முழுக்க உருவி விட்ட பிறகுதானே அவஸ்தை.

லலிதாவின் பதின்மூன்றாவது வயதில் அப்பா இறந்து போனார். அன்று வீட்டில் இயல்பான அழுகை, துக்கம் இல்லை. உறவினர்கள் பதட்டமாய் கூடி நின்று தணிந்த குரலில் பேசினர்.

'சீக்கிரம் தூக்குங்க' என்று பிரேதத்தைப் புதைக்க அவசரப்பட்டனர்.

அதற்கான காரணம் சில வருடங்கள் கழித்துதான் மகளுக்குப் புரிந்தது. அப்பா தற்கொலை செய்து கொண்டிருக்கிறார். அப்பாவை சவப்பெட்டிக்குள் வைத்திருந்த அன்றும் சரி, அதற்குப் பின் தனிமையும், பணச்சிரமுமாய் தொடர்ந்த நாட்களிலும் சரி அம்மா கத்துவாள், வெடித்து அழுவாள்.. உலகத்தையே சபிப்பாள்.

எல்லாம் ஓய்ந்ததும் போதிப்பாள்.

'இதுக்கெல்லாம் காரணம் யார் தெரியுமில்ல லலி

நல்லவன்னு நம்ப வச்சுக்கழுத்தறுத்துட்டாரே.. உங்கப்பா

தோற்றதுமில்லாம நம்மையும் இழுத்துக் கீழே சாய்ச்சுட்டாரே

உலகத்துல சுற்றிலும் ஏமாத்துக்காரங்கதான்... நீ கவனமாய் இருக்கனும் லலி.. புரிஞ்சு நடந்துக்கோ?'

அம்மாவின் விரக்தி அதில் விளைந்த வேதனை அவளை ஏறக்குறைய மனநோயாளி ஆக்கியிருந்தது.

'ஆன்ட்டி டிப்ரஷன்' மாத்திரைப் பகல்களும், 'வாலியம்' உபயத்தில் வரும் உறக்கமுமாய் அல்லாடிய அம்மா போய் ஆறு மாதங்களாகி விட்டன. கூடப் பிறந்தவர்கள் இல்லாத லலிதா இப்போது அசல் அநாதை.

கல்லூரிப் படிப்பு பூர்த்தியானதுமே சிநேகிதியின் அப்பா கம்பெனியில் உடனே தனக்கு வேலை கிடைத்ததை அப்பொழுது பெரும் அதிர்ஷ்டம் என்றே நினைத்தாள்.

போகப் போக பூவின் வாசம் தெரிவது போல பழகப் பழக அலுவலகத்தில் பலரின் புறத்தோல் கழன்டு உள்ளிருந்த ஓநாய் குணம் தெரிந்தது.

சதா ஒரு பசிப்பார்வையுடன் பலர்.

இவள் பணியாவிட்டால் அடித்து வீழ்த்தி விட வேண்டியது தான் என்ற வெறியுடன் சிலர். அதில் திவ்வேஷ் அதிக உரிமைகளை எடுத்துக் கொண்டான்.

காரணம் அவன் முதலாளியின் மகன். தோழியின் அண்ணன் என்பதாலும் முழுக்க முகம் சுளிக்க முடியாமல் விழித்தாள் லலிதா.

தோழியிடம் போய் புகார் படிக்கும் மனமுமில்லை.

இவள் தாயார் இறந்த சமயம் வந்து உதவிய அலுவலக ...ர்களைக் கண்டு நெகிழ்ந்திருந்தாள். அப்போது ...லையில் சேர்ந்த புதிது.

பிறகு தான் சிலர் முகமூடிகளைக் கழட்டிப் போட்டு ...தனர். நடவினர். இந்தப் பெண்மணி சொல்வது போல ...ல் நிறைய நல்லவர்கள் இருக்கலாம். ஆனால் ...இருக்கும் பயத்தில் பொல்லாதவர்கள் மட்டும் தானே



கண்ணில் படுகிறார்கள்? அவர்களிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும் வேண்டியிருக்கிறதே..

மரியாதைக்காக எடுத்த இரு காராசேவுகளைக் கொறித்தாள்.

புரைக்கேறியது.

பெரியம்மாளின் மருமகள் என்று கணித்த இளைய பெண் உடனே தண்ணீர் பாட்டிலைத் திறந்து நீட்டினாள்.

"நன்றி.."

"யாரோ நினைச்சுக்கறாங்க."

பெரியவள் புன்னகையுடன் சொல்ல லலிதா தலையாட்டினாள்.

அப்படி எனக்கு யாரும் இல்லீங்க."

"பெத்தவங்க?"

"இப்ப ரெண்டு பேருமே இல்லை.. அம்மா இறந்து ஆறு மாசமாச்சு."

"அடடே... அதான் முகம் இப்படி வாடி கிடக்குது. சேலத்துக்காமா போற?"

"ம்ம்.. இல்ல ஏற்காடு?"

"எங்க, பொன்னை ஏற்காட்டு பஸ்ல இல்ல வேன்ல பார்த்து ஏத்தி விட்டுவிட்டு நாம போகலாம்?"

செய்தித்தாளைப் புரட்டியபடி பெரியவர் தலையாட்டினார்.

"ஆகட்டும் அதுக்கென்ன?"

"ஏம்மா, அங்கேயுள்ள ஸ்கூல்ல வேலைக்கு சேர்ந்திருக்கியா?"

"இல்லை.. அம்மாவுடைய பெரியம்மா அங்க இருக்காங்க."

"ஆங்.. அப்ப உறவுக்காரங்க உண்டுல்ல. பிறகென்ன?" ஆறுதல் போல சொன்னாள்.

பெரிய பாட்டிக்கு எழுவது வயசிருக்கும்... அவங்க கான்வென்ட்ல வேலை பார்த்தவங்க தான்."

"அவங்க குடும்பமெல்லாம் அங்கேயே தானா?"

"பாட்டி கல்யாணமே செய்துக்கலை..."

"ஓ? அப்ப நீ போறது அவங்களுக்கு நல்ல துணை."

"ம்ம்."

முயன்று முறுவலித்தாள்.

ஒவ்வொரு கிறிஸ்துமஸ், பிறந்த நாளுக்கு மட்டுமே வழக்கமாய் வாழ்த்து அட்டையுடன் கடிதமெழுதும் பெரிய பாட்டி திடீரென்று தனக்கு கடிதம் எழுதக் காரணமென்ன?

மூன்று வருடங்களுக்குப்பின் அம்மாவின் சாவின் போது தான் பாட்டியைப் பார்த்தாள். அவர்களைத்தான் உரிமையாய் கட்டிக் கொண்டு அழ முடிந்தது.

மெல்லிசும் மிருதுவானதுமான அம்முதிய தேகம் அந்நேரம் பெரிய பலமும் ஆறுதலுமாய் தோன்றியது.

காரியங்கள் முடிந்து கிளம்புகையில் பாட்டி அன்பாய் வற்புறுத்தினார்கள் தான்.

'இப்பமே கிளம்புடா லலி... இங்கேத் தனியா இருக்க வேண்டாம். உனக்கொரு மாறுதல் தேவை... எனக்கும் துணை கிடைக்கும்...'

ஆனால் அப்போது லலிதாவிற்கு கையில் நல்ல வேலையிருந்த பலம். புது வேலையில் இதற்கும் மேல் விடுப்பு எடுப்பது சரியில்லை என்ற தயக்கம்.

'கிறிஸ்துமஸ் சமயம் வரேனே பாட்டி?'

'அதுக்கு இன்னும் எட்டு மாசமிருக்குதேடா?'

'அப்பத்தான் வசதி... தவிர பண்டிகை சமயம் என்னால் தனியே இருக்க முடியாது' என்றிருந்தாள்.



ஆனால் விதி வேறு மாதிரியாய் ஆட்டம் காட்டுகிறது.

'நீயும் உன் வேலையும் தேவையில்லை' என்று திவ்வேஷிடம் தூக்கி வீசி விட்டு வீடு வந்தவள் நெஞ்சடைப்பு தீர ஒரு மணி நேரமாய் அழுது ஆறிய போதுதான் வீட்டு ஜன்னலில் செருகப்பட்டிருந்த கடிதத்தைப் பார்த்தாள்.

அதிலிருந்த எழுத்து மெர்லி பாட்டியினுடையது என்பதைக் கண்டதும் அதை மார்போடு சேர்த்து வைத்து மேலும் ஒரு பாட்டம் அழுதாள்.

'கிறிஸ்துமசுக்கு பத்து நாட்கள் முன்னமே வந்திருடா லலி. அதற்கு முன்பும் விடுமுறை கிடைத்தால் வா சந்தோஷப் படுவேன்?' என்ற வரிகள் கொள்ளை ஆறுதலாயிருந்தன.

'வருகிறேன்' என்று தந்தி அடித்து விட்டு ரயிலேறி விட்டாள்.

## 2

ரயில் நிலையத்தின் வெளியே ஏற்காடு செல்லும் வாகனங்களுக்காய் விசாரித்த பெரியவரை லலி தடுத்தாள்.

"வேணாங்க... அவசரமாய் கிளம்பினதால் சென்னையிலிருந்து பாட்டிக்கு ஏதும் வாங்கவில்லை. சரவணால ஏதேனும் வாங்கிட்டுப் பிறகு..."

"அப்ப எங்கவண்டியில் ஏறும்மா உனக்கு வேண்டியதை வாங்கினதும் அங்கேயே விசாரிக்க ஏற்றி விடறோம்."

அத்தனை பேரையும், குறிப்பாய் தன் சிரிப்பால் அழைத்த குழந்தையை மறுக்க மனமின்றி அவர்களுடன் போனாள்.

தன்னை பஸ் ஏற்றி விட்டுக் கையசைத்த குடும்பத்தைப் பார்த்த போது துயரம் தொண்டையைக் கவ்வியது.

உலகத்தில் நல்லவர்களுக்குக் குறைவில்லை. உலகம் 70 சதவீதம் நீரால் சூழப்பட்டது போல பல நல்லவர்கள் அதை வாழ வைத்துக் கொண்டிருக்கிறார்கள் தான்.

பஸ் உறுமலுடன் மலையேறி ஆறு, ஏழு வளைவுகளைத் தாண்டியதும் காற்றின் குளுமைக் கூடியது. கீழே சேலம் நகரம் விரித்து வைத்த ராட்சச வரைபடம் போலக் கிடந்தது.

45-ம் நிமிடம் ஏற்காடுக்குள் பஸ் பெரிய பெருமூச்சுடன் நுழைந்த போது பயணிகள் எல்லாம் போர்த்தியிருந்தார்கள்.

ஆண்களின் துண்டு காதுகளை மூடும் முண்டாசாகியிருந்தது.

பெண்களின் சேலைத்தலைப்பு தோள்களைச் சுற்றியிருந்தது.

சூரிய ஒளியில் பிரம்மாண்ட வெள்ளித் தட்டு போல கிடந்தது ஏரி. அதன் விளிம்பில் சுற்றுலா பயணிகளுக்காய் படகுகள் அன்னங்களாய் நின்றன. அசைந்து அழைத்தன.

ஏரிக்கரையின் எளிய பெட்டிக்கடைகளில் பஸ் வரவும் சூடாக மசால் வடை பொரிய ஆரம்பித்தன.

பாட்டியின் வீடு சற்று தொலைவுதான். ஏற்காடு அதிக சந்தடிகளற்ற அமைதியான ஊர் என்றாலும் பாட்டி தன் வீட்டை மேலும் ஒதுங்கியே கட்டிக் கொண்டார்கள்.

லலிதாவின் தாயார் கூட அங்கலாய்த்ததுண்டு. 'ஏம் பெரியம்மா உங்களுக்கு எதுக்கு ஒரு ஏக்கர் நிலம்? இதே காசுக்கு ஊருக்குள்ளே நறுக்குன்னு ஒரு வீட்டை வாங்கியிருக்கலாம்ல? ரெண்டு எட்டு வச்சால் கடை கண்ணிக்குப் போக, சுற்றிலும் ஆளுங்கன்னு சவுகர்யமாயிருக்கும். இந்த ஒரு ஏக்கரை எப்படி பாதுகாத்து பராமரிப்பீங்க?'

வாங்கிப் போட்ட இடம் பெரியது என்றாலும் பாட்டி தனக்கென்று கட்டிய வீடு கச்சிதமானது. ஒற்றை ஆள் புழங்க, பராமரிக்கத் தோதுவான அளவில்.



மாடியில் சற்று விசாலமான அறை அதனுடன் இணைந்த குளியலறையுடன். 'நீங்க யாரேனும் வரும்போது தங்கிக்க இந்த அறை' என்ற பாட்டி யார் வந்தாலும் முகம் மலர உபசரிப்பார்கள். பாட்டி வேலைக்காரர்களின் உதவியை நாடியதே கிடையாது. 'அதென்ன நம்ப வேலையை நாம பார்த்துக்க முடியாதுன்னா எப்படி? ஓரளவு சுறுசுறுப்பா இருந்தால்தானே உடம்பு ஆரோக்கியமாயிருக்கும் மனசும்தான்' என்றபடி அத்தனை வேலைகளையும் தானேதான் செய்வார்.

ஒண்டி ஆளுக்கு அப்படி எத்தனை வேலை இருக்கப் போகிறது என்று நினைப்பவர்களுக்கு பாட்டியின் உடன் இருப்பவர்களைப் பற்றித் தெரியாது.

வீதியில் பரிதாபமாய் அலையும் நாய்களைக் கண்டால் பாட்டியின் மனம் இளகி உருகும். பெயரே மெர்ஸி. பெயரில் இரக்கத்தை வைத்திருப்பவள் மனதில் அது சுரக்கும் இல்லையா?

தன் வேலைக் காலம் முழுவதையும் பள்ளி விடுதியிலேயே கழித்தவர் மெர்ஸி. விடுதியின் வார்டனாய் தங்க நிர்வாகம் கேட்க, அங்கேயே தங்க வேண்டிய நிர்ப்பந்தம். ஆக நாய், பூனை என்று எதையும் உடன் வைத்து வளர்க்க முடியா விட்டாலும் பள்ளியின் மிருகங்கள், பறவைகள் அனைத்தையும் கண்ணாய் பராமரித்ததுண்டு. அவையும் மெர்ஸி பாட்டியின் காலடி சத்தத்திலேயே பரபரப்பாகி கூப்பிடுமாம்.

வீடு ஒரு பெரிய மேட்டை ஒட்டிய நிலம். ஆக ஒரு பக்க மேட்டையே பின்சுவராக்கி சில கூண்டுகள் தயாராகி இருந்தன. சுற்றிலும் நிறைய மரங்களும் நடப்பட்டிருக்க அந்த இடமே சில வருடங்களில் சோலை போலாகி விட்டது. குடிக்க சுத்தமான நீரும், கொறிக்க தானியங்களும் கிடைக்கும் என்பதால் பறவைகள் சதா அங்கு சுற்றிப் பறக்கும். அவற்றின் சிறகடிப்பும் கூவலும் அந்த இடத்தை மேலும் ரம்மியமாக்கும்.

தங்களை நேசிப்பார் இல்லாத சாதாரண நாய்களுக்கும் அந்த இடம் அருமையான அடைக்கலம்.

இப்போது நானும் அடைக்கலம் தேடி போவது அங்குதான் என்று கசந்த நன்னிரகத்துடன் நினைத்தாள் லலிதா.

கடைசியாய் மூன்று வருடங்களுக்கு முந்திய கிறிஸ்துமஸைத் தான் இங்கு கழித்தது. மார்கழி மாத மலைக்குளிர் பற்களை ஆட்டி விடும். ஆனால் பனி போர்த்திய படி அழகு காட்டும் அம்மலைப் பிரதேசக் கவர்ச்சியைக் காண எதையும் பொறுத்துக் கொள்ளலாம். விரைவிலேயே உடம்பு அந்தக் குளிருக்கு பழகியும் விடும்.

பஸ்ஸிலிருந்து இறங்கியவளை குளிர் கட்டிக் கொண்டது. கைகளை மார்போடு இறுகக் கட்டியபடி ஆட்டோ தேடினாள்.

"எங்கேம்மா?"

"க்ரீன் வேலி பக்கம்."

"ஏறுங்க."

முன்பு மலைப்பிரதேசத்தில் ஆட்டோவையே பார்க்க முடியாது. ஆனால் இப்போது அம்மஞ்சள் வாகனங்கள் சரிவுச் சாலைகளிலும் டர்புர் என்று ஊறுகின்றன.

"அந்தப் பெரிய யூகலிப்டஸ் மரத்தைத் தாண்டி இடது பக்கம் போகணும்" டிரைவருக்குப் பாதை காட்டினாள்.

"பாரு டீச்சரம்மா வீடுங்களா?"

ஆட்டோ இளைஞன் சிநேகமாய் விசாரித்தான்.

"ம்ம்."

"போன வாரங்கூட அங்கேருந்து ஒரு நாயைக் கூட்டிட்டு வந்தேன்."

"ஓஹோ?"

…லி பேச்சை வளர்க்கவில்லை. காய்ச்சல் கண்டவளின் …க்கு போல. திவ்வேஷின் ஈனத்தனம் கண்ட மனம் ஆண்களைக் கண்டாலே கசந்து வழிந்தது.

'இவனைத் தெரியாது.. கொஞ்சம் பேச விட்டால் பிறகு …வான்' என்பதான கோபக்குமட்டல்.



"ரோட்ல திரியற நாய்களை அம்மா எடுத்துப் பார்த்துக்கு வாங்க. பிறவு யாருக்காவது வீட்டுக் காவலுக்கு நாய் தேவைன்னா அம்மாகிட்ட கேட்டு வாங்கிக்கறது."

"ம்ம்."

"நம்ப கான்ஸ்டபிள் கூட ரோட்டுல பாவமாய் நிக்கற குட்டிகளைப் பார்த்தால் ஆட்டோவில் ஏத்தி டீச்சரம்மா வீட்டுக்கு அனுப்பிடுவாரு."

"பாவம் பாட்டி. எப்படி சமாளிக்கறாங்க?"

"உங்களுக்குப் பாட்டி முறையா? நீங்க யாரோ வடக்கத்திய பொண்ணுன்னு நினைச்சேன்."

அவள் இதற்கு 'ம்ம்' கொட்டவில்லை.

பலர் இதே போல நினைத்ததுண்டு.

கோதுமை மாவு போன்ற மூக்கும் திரண்ட கொடி உடல். தீர்க்கமான முக ஜாடை அவளை அப்படித்தான் காட்டும்.

அம்மாவின் நிறம் உடல்வாகு. அப்பாவின் முக தீட்சண்யமும் இணைந்த நேர்த்தியான கலவை அவள்.

அம்மாவிற்கு நடிகை தேவயானிப் போன்று சற்று ஜப்பான் பொம்மை முகம். ஆனால் இளமையில் கொள்ளை அழகானவள்.

கல்யாணப் படத்தில் ஓவியம் போலிருந்த அம்மாவைக் காலம் வெகு மூர்க்கமாய் சின்னாபின்னமாக்கி விட்டது.

திருமணமான ஆரம்ப வருடங்களை அம்மா ஆனந்தமாய் தான் கழித்தாள். அப்பாவின் மெட்டல் பவுடர் கம்பெனி தன் உற்பத்தியை பல பெரிய தொழிற்சாலைகளுக்கு அனுப்பி கைநிறைய காசு கொண்டு தந்தது.

ஆனால் சில வருடங்களில் அதே போல மற்றொரு கம்பெனி தோன்ற அப்பா தன் விலையை சற்று குறைத்திருக்கலாம்.

தொழிற்சாலைகள் அதை எதிர்பார்த்தன.

ஆனால் அப்பா தர்மராஜ் அதற்கெல்லாம் மசிந்து தரவில்லை.

'உன் மனசை அம்பு போல நிமிர்த்த முடியாது எனில் பிறர் மனசை வில் போல வளைக்க முடியாது'ன்னு திபெத்திய பழமொழி உண்டு. 'என் தரத்தில் பழுது இருக்காது.. என் தகுதிக்கான விலையை அவங்க தந்துதானாக வேணும்' என்று நின்று விட்டார்.

போட்டி கம்பெனியின் விலை குறைவு என்பதால் தொழிற்சாலைகள் அங்கு கொள்முதலை வாங்க ஆரம்பித்தன.

தன் அதிர்ச்சி, கவலையைக் காட்டிக் கொள்ளாமல் தர்மராஜ் நிற்கத்தான் பார்த்தார். ஆனாலும் தடுமாறியவரை அப்படியே இழுத்து சாய்த்தது போட்டியாய் முளைத்த 'சாலமென் மெட்டல்ஸ்'.

சாலமென் தன்னுடன் படித்த, பழகிய நண்பன் என்பதால் தர்மராஜிக்கு அது இரட்டை அதிர்ச்சி.

கம்பெனி தேய்ந்து கட்டெறும்பானது.

இளவயதிலேயே உயரங்களை எட்டி விட்ட தர்மராஜால் வீழ்ச்சியை தெளிவாய் கையாள முடியவில்லை. தற்கொலை செய்து கொண்டார்.

அப்பா ஒரு கோழையாய் தன் முடிவைத் தேடிக் கொண்டவர் என்பதில் லலிதாவிற்கு மிகுந்த வருத்தம்தான்.

கணவனை இழந்த துக்கத்தை கையாள அம்மா எடுத்த வழிகளும் சரியில்லை.

புலம்பினாள், சீறினாள், அளவேயில்லாமல் சாப்பிட்டாள்.

நிஜத்திலிருந்து தப்பிக்க சதா தூங்க முயன்றாள்.

எடை ஏற ஏற உடம்பில் பல வியாதிகள் வந்துத் தங்கின. மருத்துவர் ஆலோசனைகள் எதற்கும் காது கொடுக்காத அவளை வியாதிகள் சீக்கிரமே தின்று தீர்த்தன.



ஆட்டோ இடதுபுறமாய் வளைந்து திரும்பியது.

முன்னைப் போலவே அங்கிருந்த கல்சுவர்கள் எங்கும் படர்ந்த கொடி ரோஸ் பச்சை இலைகளும் செம்பு நிறப் பூக்களுமாய் அடர்ந்து மூடியிருந்தது.

அடுத்தாற் போல பாட்டி வீடுதான்.

மூன்று நாய்கள் சூழ ஒரு முதிய ராணி போல 'கேட்'டின் அருகே தனக்காக காத்து நின்ற பாட்டியைப் பார்த்தவளுக்கு உள்ளே ஆனந்தமும் அழுகையுமாய் கலந்து பொங்கின.

ஓடிப்போய் கட்டிக் கொண்டாள்.

## 3

சற்று முன்பு குழந்தையாகி தாய் மடியில் தஞ்சமாகி விட மாட்டோமா என்று ஏங்கினாளே.. அந்த ஏக்கம் இப்போது நிறைவேறி விட்டதைப் போல சிலிர்த்தது உடம்பு.

"நல்லாயிருக்கியா லலிம்மா?"

இவள் நெற்றியிலும் பின் கன்னங்களிலுமாய் முத்தமிட்டாள் முதியவள்.

"ம்ம்.. நீங்க?"

"கர்த்தர் கிருபையிலே ஒரு குறையுமில்ல."

இவர்கள் அணைப்பைப் பார்த்த நாய்களுக்கு உற்சாகம் பிடித்து போலும். தாங்களும் எம்பிக் குதித்தன. புதிய விருந்தாளியை முகர்ந்தபடி முனங்கின.

"ஒரு நிமிஷம் பாட்டி. ஆட்டோவுக்கு பணம் குடுத்திட்டு வர்றேன்.

அதற்குள் ஆட்டோ வட்டமடித்துக் கிளம்பத் தயாராய் நின்றது.

அவள் பெட்டி பையை இறக்கிய ஓட்டுனர் இவள் தந்த பணத்தை வாங்காமல் நின்றான்.

"ஏன் போதாதா?"

"டீச்சர் பேத்திட்ட ஏதும் வாங்க முடியாதும்மா."

"என்ன கண்ணன், நல்லாயிருக்கியா?"

"உங்க ஆசீர்வாதம்மா."

"நீ போன வாரம் போய் விட்டுட்டு வந்த மனு புது வீட்டில் பழகிடுச்சாம். அவங்க போன் போட்டு சொன்னாங்க. நாலு பூனைக்குட்டிங்க இருக்குது- அதுகளை யார் வீட்டிலேயாவது கொண்டு சேர்க்கணும்."

"ஆகட்டும்மா."

"முக்கியமானதை மறந்துட்டோம் பார். உம் மனைவிக்குப் பிரசவ சமயமாச்சே."

"குழந்தை பிறந்திடுச்சம்மா... எதிர்பாராம வந்ததால உங்களுக்கு இனிப்பு கொண்டு வரலை."

"தேதியே இனிப்புத்தானே. என்ன குழந்தை?"

"பொண்ணுங்கம்மா."

முதிய முகத்தின் கனிவு குறைந்தது.

"என்ன அலுப்பாய் சொல்ற? ஜவஹர்லால் நேருக்குப் பிறந்தது ஒரே பொண்ணுதான். ஆனா நாட்டையே ஆளலே?"

சிரித்தான்.

"உங்ககிட்டேருந்து இப்படி ஒரு அதட்டல் வாங்கிட்டுப் போற ஆசையிலதாம்மா அப்படி சொன்னேன். எங்களிலேயும் முதல் குழந்தைப் பொண்ணாய் பிறந்தால் அதிர்ஷ்டம். லக்ஷ்மியே வந்துட்டான்னுதான் சொல்வோம்."



"நல்லது. ஒரு நிமிஷம் இரு."

தன் சாமான்களுடன் வீட்டினுள் போனாள் லலிதா.

பாட்டி தன் பீரோவிலிருந்து ரோஜா நிறத்தில் மிருதுவான கம்பளியால் பின்னப்பட்ட குல்லா, காலுறை, ஸ்வெட்டர் என்று ஒரு குட்டி செட்டை எடுத்து அழகாய் பொதிந்து-

"இதைக் கண்ணன்ட்ட கொடுத்திட்டு வரேன்டா லலி. பலகாரம், டீ எல்லாம் தயாராய் இருக்குது. நீ முகம் கழுவிட்டு வந்துடேன்."

"மெள்ள வாங்க.. நான் முடிஞ்சா ஒரு குளியலே போட்டுடறேன்." லலிதா மாடியேறி தன் சாமான்களைப் பிரித்தாள். அறை துளி தூசியில்லாது பளபளத்தது.

படுக்கை விரிப்பில் சின்ன சுருக்கமில்லை.

உருளையான கண்ணாடிக் குவளையில் நீருற்றி லில்லியோடு கொடி ரோஜாக்கள் செருகப்பட்டிருந்தன.

லலிதாவிற்கு தன் தாயின் நினைப்பு வந்தது.

அம்மா இதற்கு நேர்மாறு- நேராய் இருக்கும் வீட்டைத் தாறுமாறாக்கிப் போடுவாள்.

லலிதாதான் அக்களேபரத்தைச் சீராக்க வேணும். கல்லூரிக்குப் போகும் முன் சமைத்து பெருக்கித் துவைத்து என்று அல்லாடுவாள்.

ஆனால் குறைபட்டதேயில்லை.

அம்மா தன்னுடன் இருப்பதே போதும் என்ற திருப்தி.

குளியலறையிலிருந்த ஒரு முழு கீஸரை உயிர்ப்பித்தவள் தன் கூந்தலைச் சிக்கெடுத்து முடிந்தாள். பெட்டியிலிருந்த டவல், உடைகளை எடுத்த நேரத்தில் வெந்நீர் தயாராகியிருந்தது.

இளம் சூடான நீர் உடம்பை சுகமாய் பிடித்து விட்டது.

நீர் தான் எத்தனை விசேஷமானது.

குடித்தாலும் சரி. குளித்தாலும் சரி உடனே அலுப்பை விரட்டி விடுகிறதே.

அதைப் பாதுகாக்க சேமிக்க மனிதன் கற்றுக் கொண்டால் தேவலை. இந்த யோசனையுடன் துடைத்து பவுடர் தடவி கையில்லாத சாட்டின் நைட்டிக்குள் புகுந்தவள் கீழே இறங்கினாள்.

"அடடே லலி அதுக்குள்ளே குளிச்சட்டியா?"

"உடம்புக்கு ஊத்திகேன்."

"நான் இவ்வளவு நேரமா கண்ணனோட பேசிட்டு இருந்துட்டேன்?"

"பத்தே நிமிஷந்தானாச்சு பாட்டிம்மா."

"அதுக்குள்ளே பூனைகளுக்குப் பாலும் ஊற்றி வச்சிருக்கியே?"

"நான் வைக்கலையே" என்றபடி அப்போதுதான் பாட்டியின் விரல் நீண்ட பக்கம் பார்த்தாள் லலிதா.

"ஹைய்யோ.. என்ன க்யூட்! ஒவ்வொன்றும் கம்பளிநூல் பந்து மாதிரியிருக்கே?" பீங்கான் தட்டிலிருந்து பாலை தடுமாறி குடித்துக் கொண்டிருந்தன குட்டிகள்.

நெருங்கியவள் மண்டியிட்டு அவைப் பசியாறும் அழகை ரசித்தாள்.

பிறந்து ஒரு மாதம் கூட ஆகாத குட்டிகள்-

தட்டுக்குள் காலை விட்டு பின் ஈரக்காலை உதறியபடி 'ஸ்ப்ப்' என்று கண்ணை மூடியபடி நக்கின அழகாய்.

"நீ வைக்கலியா? அப்படின்னா... சுதாகர்தான் வச்சிருப்பான்."

"அது யாரு?"

"நம்ப வீட்டின் பின்னாலிருக்கற அவுட் ஹவுஸ்ல குடியிருக்கறான்."



"சரி.. அவன் எப்படி யாருமில்லாதப்ப நம்ப வீட்டுக்குள்ளே வந்தான்?"

"பின்வாசல் வழியாய் வந்திருப்பான்."

அந்நிய ஆண் ஒருவன் இங்கே இப்படி தயக்கமின்றிப் புழங்குகிறானா? இது தெரிந்திருந்தால் இந்த இரவு உடையில் கீழிறங்கி இருக்க மாட்டாள். தவிர அவசரமாய் குளித்த தான் தன் அறைக்கதவைத் தாழிட்ட நினைப்பும் இல்லையே.

அவன்.. அவன் வந்து திறந்திருந்தால்?

"அப்படி முழிக்காதே லலி. சுதாகர் நல்ல பையன். வா உக்கார். உனக்குப் பிடிச்ச ராகி கஞ்சி."

லலிதா சிரித்து விட்டாள்.

பாட்டி வீட்டில் தினம் காலை உணவோடு ராகிக் களியும் உண்டு.

"எனக்கு பிடிக்காது" என்றவள் முகம் சுளித்தால், "உடம்புக்கு ஆரோக்கியமானதெல்லாம் நமக்குப் பிடிக்கணும். சாப்பிடு." என்று கறாராய் சாப்பிட வைத்து விடுவார்கள்.

மெத்தென்ற இட்லி, தக்காளி சட்னியோடு ஆவி பறந்த கஞ்சியையும் உறிஞ்சினாள். பாலும், சர்க்கரையும் சேர்ந்த அது சுவையாகவே இருந்தது.

"முன்னே இதே போல ஒருத்தனை அவுட்-ஹவுஸில் குடிவச்சிருந்தீங்க."

குற்றம் சாட்டும் வகையில் நினைவூட்டினாள்.

"ம்ம். ராஜா."

"அந்த ராஜா உங்க வெள்ளிச் சாமான்களை எல்லாம் மூட்டைக் கட்டிட்டு ஓடிப் போயிட்டானில்லை? பிறகு ஏன் மறுபடி அதே வேண்டாத வேலையைப் பண்ணியிருக்கீங்க பாட்டிம்மா?"

"இவன் அருமையானப் பையன்ம்மா?"

புன்னகைத்த முதிய முகம் வெகு அழகானதாய் தோன்றியது.

சுருக்கமற்ற இளமையை விட அனுபவமும் வாழ்வை அர்த்தமுள்ளதாய் வாழ்ந்து விட்ட திருப்தியும் கொண்ட முதுமை கண்களை மட்டுமல்லாமல் மனதையும் நிறைக்கும் போலும்.

"அவன் திருட்டு ஒடினதை நீங்க போலீஸில் புகாரும் பண்ணலை."

புகார் போல சொன்னாள் பேத்தி.

"போகட்டும்மா. நான் வெள்ளித் தட்டுல சாப்பிட்டாத்தானா? அவனுக்கு என்ன கஷ்டமோ, தேவையோ?"

"ம்ம். ஏமாந்த ஆள்தான் தேவை. நல்லபையன்னு ஒருத்தர் வருவாரே. பின்னால தோட்டத்தை ஒழிக்க. நாய்களை எல்லாம் குளிப்பாட்டன்னு இன்னும் வர்றாரா?"

"தினம் பால் கொண்டாருவான். மற்ற வேலைகளுக்கு அப்பப்ப வர்றதுதான்.. இன்னொரு இட்லி?"

வயிறைத் தட்டினாள் லலிதா.

"இடமேயில்லை பாட்டிம்மா.. ஆனா."

"டீக்கு இடமிருக்குது. அதானே?"

லலிதா சிரித்தாள்.

"அதில்லை. இனி இப்படி வீட்டைத் திறந்து போடாதீங்க. எனக்கு.. எனக்கு பயம்மா இருக்குது."

பேத்தியின் தோளியை வியப்புடன் கவனித்தாள் மெர்லி பாட்டி.

"சுதாகர் நல்லவன்ம்மா.. இப்படித்தான் வந்த நாளிலிருந்து நான் வேலையேயே ஒவ்வொரு வேலையாய் செய்து வச்சுட்டுப் போவான். போன் கூட அவசியம்னு அவன் ஏற்பாடு செய்தது தான். போன வாரம் பால் ஊற்றி கீழே வைக்கறதுக்குள்ளே தடுமாறி தட்டை உடைச்சுட்டேன். உடனே மறுதட்டை வாங்கிட்டு வந்துட்டான். எனக்கும் வயசாகுதில்ல."



"இப்ப நான் வந்தாச்சே. ஒரு மாசமேனும் தங்கப் போறேன். ஆக இனி இந்த வேலை எல்லாம் எம்பொறுப்பு."

"சந்தோஷம்டா... ஆனா ஒரு மாசம்னா உன் வேலை என்னாச்சு?"

"விட்டுட்டேன்."

"ம்ம்.. சரி."

மேலே துருவாமல் இருவருக்குமாய் தேநீர் ஊற்றிய பாட்டியை சற்று வியப்புடன் பார்த்திருந்தாள் பேத்தி.

இதுவே அம்மாவாய் இருந்திருந்தால் வானத்துக்கும் பூமிக்குமாய் குதித்திருப்பாள்.

பாட்டியின் இந்த அமைதி பிடித்திருந்தது.

அதில் பிறரையும் அமைதிப்படுத்தும் இதம் இருந்தது. "என் சிநேகிதியோட அப்பா கம்பெனியிலே வேலை கிடைச்சது பாட்டிம்மா... சுலபமாய் வேலை கிடைச்சதுன்னு சந்தோஷப் பட்டேன். ஆனா ஆரம்பத்துல கொஞ்சமாய் ஜொள்ளு விட்ட முதலாளியோட பையன். அவனும் என் டிபார்ட்மென்ட்தான். பிறகு ரொம்ப தொந்தரவு பண்ண ஆரம்பிச்சுட்டான்."

"உனக்கு யாருமில்லைங்கற துணிச்சல்.. ம்ம்..?"

"ஆமா. அதான் வேலையை விட்டுட்டேன். இனி 'வான்டட்' காலம் பார்த்து விண்ணப்பம் போடறது தான் வேலை. ஏன் பாட்டிம்மா.. இங்கே உங்க கான்வென்ட்ல எனக்கு ஏதும் வேலை கிடைக்குமா?"

ஒருவித பரிதாபமான ஆவலுடன் கேட்ட இளையவளின் தலையை ஆதுரத்துடன் கோதினாள் பாட்டி.

"கொஞ்ச நாள் நிம்மதியாய் தூங்கு. திருப்தியாய் சாப்பிடு. மெலிஞ்சு தெரியறே. உடம்பும் மனசும் தேறட்டும். பிறகு பார்ப்போம்."

மீண்டும் தன் பாட்டியைக் கட்டிக் கொண்டாள் லலிதா.

ஆனால் பாட்டியின் பின்னால் தெரிந்த அப்புதிய ஆணின் முகம் அவளைத் திடுக்கிட வைத்தது.

## 4

"ஸாரி. கதவைத் தட்டினேன். உங்களுக்குக் கேட்கலை போல."

இயல்பாய் விளக்கமளித்தபடி நின்றான் அவன்.

"வா சுதாகர்.. இதுதான் என் பேத்தி லலிதா."

"ஹலோ.."

ஒரு இறுக்குப் புன்னகையுடன் தலையசைத்தான்.

இவள் அவை எதுவுமின்றி மௌனமாய் நின்றாள். பார்வையில் சின்ன எரிச்சல். "லலி இப்பத்தான் சொன்னா.. இனி வீட்டின் முன், பின்பக்கக் கதவை எல்லாம் பூட்டி வைக்கணும்னு."

லலிதாவின் எரிச்சல் இப்போது பாட்டியின் பக்கம் திரும்பியது.

இதை ஏன் இவனிடம் சொல்ல வேண்டும் என்ற கடுப்பு.

ஆனால் எதுவும் தன்னை உறைத்ததாய் காட்டிக் கொள்ளவில்லை அவன். "டவுனுக்குப் போறேன் டீச்சர். உங்களுக்கு ஏதேனும் வாங்கி வரணுமா?"

"ஆமாம்ப்பா சுதாகர். டி.வி. மேல் லிஸ்ட்டும் பணமும் வச்சிருக்கேன்."

"சரி.."

"அப்புறம்ப்பா.. நாளை ஞாயிற்றுக்கிழமை இல்லையா? நீ கோவிலுக்குப் போகும் போது லலியையும் அழைச்சிட்டுப் போகணும்."



லலிதா சற்று கோபமாய் பார்க்க, அவன் பார்வை ஏளனமாய் தன்னில் நிலைப்பதை உணர்ந்தாள்.

"நான் கோவிலுக்கு நடந்து போயிடுவேன் பாட்டிம்மா." வெடுக்கென்று சொன்னாள்.

"காலை எட்டுக்கெல்லாம் ஆராதனை. இங்கேயிருந்து கோவிலுக்கு நடக்க குறைஞ்சது அரை மணி நேரம் ஆகும்."

"நான் ஏழரைக்கெல்லாம் தயாராகி கிளம்பிடுவேன்."

"உங்க பேத்திக்கு உங்களவு விசாலமான மனசில்லை டீச்சர். எங்கூட வர யோசிக்கிறாங்க."

அடிக்குரலில் சொன்னவனை இவள் அடிக்கண்ணால் கடுமையாய் பார்த்தாள்.

அவன் அதை பொருட்படுத்தாமல் தன்னைச் சுற்றி எம்பி விளையாடிய நாய்களைக் கொஞ்சுவதில் மும்முரமாய் இருந்தான்.

"இது தனிமையான ரோடும்மா... அக்டோபர் மாசம்ங்கறதால மழை சதா தூறுது. ரோடு சேறும் சகதியாயிருக்கும்.. அதான்."

"சமாளிச்சிடுவேன். நீங்க கோவிலுக்குப் போறதில்லையா பாட்டிம்மா?"

"மழைக்காலம் எம் முட்டுங்க 'சிக்'குனு இறுகிக்கிடுதும்மா. ஆகக் காலைல டி.வி.யிலே வரும் ஆராதனை நிகழ்ச்சியைப் பார்த்து ஜெபம் பண்ணிக்கறதோட சரி."

"அப்ப நானும் இங்கே அதையே செய்துடறேன்."

"நீ சின்னவ. வெளியே போய் நாலு வேற்று முகம் பார்த்தால் தான் நல்லாயிருக்கும்."

"நான் ஏற்காடு வந்தது உங்களை மட்டும் பார்க்கத்தான்." என்றவள் தன் அரைகுறை உடையில் தொடர்ந்து ஒரு ஆணின்

முன் நிற்க முடியாமல் அவசரமாய் தன் அறைக்குள் போய் ஞாபகமாய் கதவைத் தாழிட்டுக் கொண்டாள்.

பாட்டி இப்படி ஒரு தடியனை வீட்டில் இப்படி... என்ன சொன்னாள்... ஆங்... விசால மனதுடன் நுழைய உலவ விட்டிருப்பது தேவையா?

அதிலும் இப்படி ஒரு முரட்டு தடியன்.

அது- அதுதான் அவனை விவரிக்க சரியான வார்த்தை.

என்ன உயரம்? ஆறடி இருக்குமா?

ஆறடிக்கு ஒரு அங்குலம் வேணுமானால் குறைவாய் இருக்கலாம்.

உடற்பயிற்சி செய்ய மெனக்கெடுவான் போலும்.. எத்தனை முறுக்கேறிய புஜங்கள்.. பலகை போல நெஞ்சு.

அந்த உடை அவனை மேலும் முரடனாய் காட்டியது. மங்கிய ஜீன்ஸ். பாதி பொத்தான்கள் மட்டுமே பொருத்தப்பட்ட கட்டமிட்ட சட்டை.. இத்தனை முடியடர்ந்த மார்பை இப்படித் திறந்து போடுவானேன்?

அவன் தலை முடியும் கூட அவனைப் போலவே முரடுதான்.

புருவம். மீசை.. ஏன் நீண்ட கண் இமைகளும் கூட..

திடுக்கிட்டாள்!

இத்தனை உன்னிப்பாகவா அவனை ஆராய்ந் ...ருக்கிறேன்?

அவன் உயரம். உருவம். இமைகள் வரை.. அதுதான் ...னை அத்தனை ஏளனமாய் பார்த்தானோ?

...ரில் தொங்கிய மூன்றடி உயரக் கண்ணாடியில் தன்னைப் ...த்தாள். கையில்லாத அந்த சிவப்பு நைட்டியை மீறிய ...ழும் தந்த கைகளும் முகமும் எடுப்பாய் மிளிர்ந்தன.



வெளிநாட்டிலிருந்து வந்து கல்லூரியில் உடன் படித்த ஒரு தோழியின் பரிசு இந்த உடை..

இங்கு சுதந்திரமாய் உலவலாம் என்ற நினைப்பில் எடுத்து வந்தது பிசகு.

ஒரு சேலைக்கு மாறி விடவேண்டியதுதான் என்ற நினைப்புடன் எதேச்சையாய் ஜன்னல் பக்கம் பார்த்தவளின் உடல் சற்று விறைத்தது.

இங்கிருந்து நேர்க்கோட்டில் இருந்தது அவன் தங்கும் அவுட்-ஹவுஸ்.

அதன் ஜன்னலில் ஏதோ சலனம்.

அவன் அங்கிருந்து தன்னை நோட்டமிடுகிறானோ?

நெஞ்சம் படபடக்க ஜன்னலின் திரையை இழுத்துப் போர்த்தினாள்.

இங்கும் தனக்கு நிம்மதி. அமைதி கிடைக்காதோ?

ஒருவிதமான ஏமாற்ற சலிப்புடன் உடை மாற்றலானாள்.

அன்று முழுக்க அவன் கண்ணில் படவில்லை. படுக்கும் முன் மறுபடி அச்சிவப்பு உடைக்கு மாறியவள் பயண அசதியில் சீக்கிரமே உறங்கப் போனாள்.

ஞாயிற்றுக்கிழமை காலை மசமசப்பாய் விடிந்தது.

பாட்டி சொன்னது போல சன்னமான தூறலில் நனைந்து கொண்டிருந்தது ஏற்காடு.

நேற்றே கேட்டு வைத்திருந்தபடி அன்றைய வேலைகளில் இறங்கினாள் லலிதா. தங்களுக்கான தேநீரைக் கெட்டிலில் ஊற்றி. 'கோஸி'யைப் போட்டு மூடியவள் நாய்களுக்கான களியைக் கிளறினாள்.

ஆவி பறந்த களியில் முட்டைகளை ஊற்றிக் கிளறி சிறிது பாலையும் சேர்த்த நேரம் நாய்கள் பின்கதவைச் சுரண்டின.

தங்கள் உணவு தயாராகி விட்டதை உணர்ந்த ஆர்வப் பரபரப்பு அவற்றிற்கு.

போய் வீட்டின் பின்கதவைத் திறந்தவள் அதட்டினாள்.

"யார் உங்களை அவிழ்த்து விட்டது? ம்ம்?"

"சதாகர் தான் காலைல ஜாகிங் போறதுக்கு முன்னமே இதுகளைத் திறந்து விட்டுடுவான் லலி.."

"ஓஹோ?"

ஆறிக் கொண்டிருந்த கஞ்சித் தட்டுகளை பின்புறம் கொண்டு வைத்தாள். சாக்கு படுக்கையில் பஞ்சு உருண்டைகளாய் சுருண்டிருந்த பூனைக் குட்டிகள் சோம்பல் முறித்தன.

"ஐயோ, செல்லம்.. இதுகளைக் குப்பையில் வீச எப்படி பாட்டி யாருக்கும் மனசு வரும்?"

"இதுக்கு ஒரு நாளைக்கு அஞ்சு தரமேனும் பால் வைக்கணும். அது எல்லாராலும் முடியற காரியமா?"

"யாருக்குத் தேவைன்னு பார்த்துத் தரலாம்ல?"

"அதுக்கெல்லாம் யாருக்கும் பொறுமை கிடையாது லலி. அதான் அந்த வேலையை நான் செய்றேன். ம்ம்.. டீ பிரமாதமாய் போட்டிருக்கே."

"இன்னைக்கு நமக்கு சீஸ் ஆம்லெட், டோஸ்ட், ஓட்ஸ்- [illegible]?"

"சரிபோ சரி டிவியைப் போடு."

இருவரும் ஒளிபரப்பான கிறிஸ்தவ நிகழ்ச்சியை அமைதியாய் கவனித்தனர்.

அன்றைய செய்தியின் சாரம்-மன்னிப்பு.

"கிறிஸ்தவத்தின் அடிப்படை அன்பு. அன்பிருந்தால் எல்லாம் கூடும். மன்னிப்பு உள்பட சரிதான். ஆனா அதை நடைமுறைப்படுத்தறது சிரமம் பாட்டிம்மா."



"நம்ப மதத்தில் சடங்கு சம்பிரதாயங்களுக்கு இடமில்லை லலி. கூடித் தொழுவது நல்லதுன்னு நாம ஞாயிறு கோவிலுக்குப் போறோம். ஆனா கடவுள் நமக்கு சொன்னது.

'கடவுளை நேசி' அடுத்தது.

'உன்னைப் போல பிறனையும் நேசி.' அவ்வளவுதான்.

குற்றவாளியை இல்லை குற்றத்தை மட்டுமே வெறுக்கணும். நாம் மற்றவர்களை மன்னிக்காவிட்டால் கடவுள் நம்மை மன்னிக்க மாட்டார்ரது வேதம்."

லலிதா ஒரு மாதிரியாக விழித்தாள்.

"அன்புதான் ஒருவனை முதிர்ச்சியடைய செய்கிறது. அது அடிப்படையில் ஒரு உணர்வு இல்லை-செயல்.."

"பேசறது சுலபம்.. ஆனா நமக்குக் கெடுதல் செய்றவங்களையும் மன்னிக்கறது படு சிரமம் பாட்டிம்மா.."

காரமும் கறாருமாய் சொன்னாள் லலிதா.

அவளுடைய இளமுகம் உணர்ச்சி மிகுதியில் சிவந்திருந்தது.

"அது சாத்தியம்னு காட்டத்தான் கடவுள் மனுஷனாய் உலகத்திலே பிறந்து 33 வயசு வரை வாழ்ந்தார். வெற்று துவேஷத்தால் தன்னை சிலுவையில் அறைந்தவர்களுக்காய்-"

'ஆண்டவரே இவர்களை மன்னியும்'னு வேண்டினார்.." லலிதாவின் உதடுகள் துடித்தன.

"எனக்கு.. என்னால அது முடியும்னு தோணலை.."

"மனம் பக்குவப்பட்டால் எதுவும் முடியும்டா லலி.. நமக்குள் வெறுப்பும் கசப்புமாய் சேர்க்க சேர்க்க நமக்குத்தான் பாதகம். அன்பால் மனசை நிரப்பிட்டால் வாழ்க்கை இலகுவாயிடும் இனிமையாய் போகும்."

"குட் மார்னிங்.. இங்கேயே பிரமாதமான பிரசங்கம் பண்ணிட்டிருக்கீங்களே டீச்சர்.."

இவன் எப்படி உள்ளே..?

இவளது நினைப்பு புரிந்தாற் போல-

"பின் கதவு திறந்துதான் இருந்தது" - விளக்கினான்.

"நாய்க்காக திறந்து விட்டிருந்தேன். நீங்க நுழைஞ்சிட்டீங்க.." குரோதத்துடன் சொன்னாள்.

அவன் அதைக் கண்டு கொண்டதாய் தெரியவில்லை.

கெட்டிலின் தேநீரை ஒரு கப்பில் ஊற்றியவன், சோபாவில் சாய்ந்தபடி கையோடு எடுத்து வந்திருந்த செய்தித்தாளை மேயலானான்.

"பேப்பரை யார் போடுவா பாட்டிம்மா?"

"நல்லப்பன்தான்- பின் வழியே வர்றது சுலபம்ன்றதால் பேப்பரையும் பாலையும் சுதாகர் வீட்லயே போட்டுடுவான்.."

"ஓ- இவர் கோவிலுக்குக் கிளம்பலையா?"

குரலைத் தணித்து கேட்டாள்.

"சுதாகர் ஞாயிறு காலை எங்கூடத்தான் சாப்பிடுவான்.."

"ஓஹோ?"

"எல்லாம் ரெடிதானா லலி?"

"இதோ.. ரெண்டு நிமிஷம்."

முட்டைகளை ஆத்திரத்துடன் பலக்க அடித்தாள். அடையாக வார்த்து அதில் பாலாடைத் துருவலோடு காரப் பொடியைத் தூவியவள், டோஸ்ட் ரொட்டி, பாரிட்ஜை மேசையில் வைத்தாள்.

"எல்லாம் ரெடி.."

அவனை சோபாவில் காணோம். திடும்மென்று மேசையின் மறுபுறம் தரையிலிருந்து எழுந்தவனைப் பார்த்தவளுக்கு திக்கென்றது. கண்களை மூடியவள் அலறினாள்.



## 5

"ஸாரி... உங்களைப் பயங்காட்ட நான் இங்கே பதுங்கலை லலிதா..." எழுந்து மன்னிப்பு கேட்டவனை வெறித்தாள்.

"பூனைக்குட்டி தரையில் ஈரம் பண்ணிடுச்சு.."

"..."

"நீங்களோ டீச்சரோ அதிலே கால் வைத்து வழுக்கிடக் கூடாதுன்ற அவசரத்தில் அதிலே பேப்பரைப் போட்டேன்."

"நான்.. நாங்க இன்னும் பேப்பர் படிக்கலை.."

வாய் விட்டு சிரித்தான்.

"போட்டது இன்னைய பேப்பரில்லை. பழையதுதான். காகிதம் ஊறினதும் அதை எடுத்து இந்த அட்டைப் பெட்டியில் போட்டுட்டால் குட்டிங்க இனி தாங்க அங்கதான் ஈரம் பண்ணணும்னு தெரிஞ்சுக்குங்க.."

"ம்ம்."

"ஏன்.. ஏன் அப்படி பயப்பட்டீங்க?" மிக மிருதுவாய் வினவினான்.

"இல்லை.. அங்க எதிர்பார்க்கலை.."

"என்னைப் பிடிக்கவில்லை.. சரிதானா?"

"நான் பாட்டி வீட்ல வேற யாரையும் எதிர்பார்க்கலை. அவ்வளவுதான்."

"இந்த வயசில், இத்தனை அழகான ஒரு பெண் தனிமையைத் தேடி வந்து ஒதுங்கறதுன்னா ஆழமாய் காயம் பட்டிருக்கணும்.."

"உங்களுக்குத் தேவையில்லாத விஷயங்கள்ல ஏன் மூக்கை நுழைக்கறீங்கன்னு தெரியலை.."

"எனக்கு கொஞ்சம் நீள மூக்குதான்... அதுக்காக சைக்கோதில் படத்தில் வர்ர மாதிரி அலறிடறதா? அதான் கேட்டேன்."

தன் மூக்கைத் தடவியபடி பேசினவளை முறைத்தாள்.

"அடுத்த வாரம் கோவிலுக்கு- எங்கூட வரலாமில்லையா?"

"அவசியம்னு தோணலை."

அதற்குள் தோசைக்கல்லிலிருந்து ஆம்லெட்டுகளை எடுத்து வந்த மெர்லி "சாப்பிடுவோமா.. கமகமங்களை?" என்று கேட்டு சூழ்நிலையை சகஜமாக்கினாள்.

பரிமாறியவள் முட்டையை மென்றபடி தலையசைத்தாள்.

"ம்ம்.. பிரமாதம்.."

வெளிர் நீலச்சட்டை, கருப்பு பேண்ட் என்று அவன் தோற்றம் இன்று மாறியிருந்தது. கண்ணியமும் கம்பீரமுமாய் தெரிந்தான்.

சட்டை பொத்தான்கள் கழுத்து வரைப் போடப்பட்டிருந்தன. புருவமும் கண் இமைகளும் மட்டும் அதே போல கறுகறு புருபுரு என்று.. "இந்த முட்டை எப்படி செய்றது?" என்ற கேள்வியுடன் அவன் நிமிர, தன் பார்வையை அவசரமாய் விலக்கினாள்.

தன் தட்டையேப் பார்த்தபடி பதில் சொன்னாள். சாப்பிட்ட தன் தட்டை கழுவி வைத்த பிறகு கிளம்பினாள்.

"சந்தையிலே வழக்கம்போல காய்கறி, பழம்தானே வாங்கணும். உனக்கு?"

"ம்ம்.. உனக்கேதும் தேவையா லலி.."

"இல்லை"



பாட்டி ஏன் தன்னை இப்படி அவ்வப்போது வம்புக்கு இழுக்க வேணும் என்ற முணங்கலுடன் மேசையைத் துடைக்கலானாள் லலிதா.

ஜெராக்ஸ் பிரதிகள் போல அடுத்த மூன்று நாட்களும் கழிந்தன. சமைக்க, சுத்தம் பண்ண, தூங்க, இருந்த சில புத்தகங்களைப் படிக்க என்று மாற்றங்களில் சுவாரஸ்யம் இல்லாமல். சுதாகர் கண்ணில் படவேயில்லை. நாய் என்று ஜாடை பேசியது உறைத்து விட்டதோ? அல்லது தான் அவனைக் கண்டு அலறியதில் ஒதுங்கி விட்டானா? ஏதோ ஆனால் நான்காம் நாள் எனக்கு மாறுதல் அவசியம் என்று அடம்பிடித்தது புத்தி.

முன்பு இங்கு வந்தபோது அம்மா உடன் இருந்தார்கள். தவிர அது கிறிஸ்துமஸ் சமயம் என்பதால் பலகாரம் செய்ய, கிறிஸ்துமஸ் மரம் நட, அதை அலங்கரிக்க என்று சுவாரஸ்யமான வேலைகள் இருக்கும். உறவினர்கள் வருவதும் போவதுமான ஆர்ப்பாட்டம் உண்டு. பாட்டியின் மூட்டு வலி இவ்வளவு தீவிரமாகாததால் சேர்ந்து கடைகளை சுற்றி வருவார்கள். ஜவுளி எடுக்க சேலத்திற்கு போனதுண்டு.

விவேகானந்தாவில் பிரியாணி சாப்பிட்டு விட்டு, கால் ஓயும் வரை ஊரை வலம் வந்த பின் பஸ் ஏறுவார்கள்.

இப்போது வீடே வெறுமையாய் படுகின்றது.

வேலையின்றி சுற்றி சுற்றி வருகிறாள். இவள் போகுமிடமெல்லாம் பூனைக் குட்டிகள் தட்டுத்தடுமாறி தொடர்வது அழகு தான் என்றாலும் அவற்றையும் எவ்வளவுதான் கொஞ்சுவது?

அன்று முழுக்க சாரல் இல்லாததால் தரை உலர்ந்திருந்தது.

காலார நடக்கக் கிளம்பினாள். நீண்ட நேரம் நடந்துத் திரும்பியவளுக்கு புத்துணர்வு கிடைத்ததாய் பட்டது. வரும் ஞாயிறன்று கோவிலுக்குப் போய் விட வேண்டியதுதான். கடவுளை வீட்டிலும் வணங்கலாம் என்றாலும் பாட்டி சொன்னது போல நாலு புது முகங்களைப் பார்ப்பதும், கீர்த்தனைகளை வாய்

விட்டுப் பாடுவதும் உற்சாகத்தை மீட்டுத் தரும். காலை எழரைக்கெல்லாம் கையில் குடையுடன் நடக்க ஆரம்பிக்க வேண்டும்.

வீடு திரும்பியவள் சற்று நேரம் பாட்டியுடன் கதையடித்து விட்டு இரவுச் சமையலுக்காய் எழுந்தாள். "இன்னைக்கு எதும் செய்ய வேண்டாம்டா லலி."

"ஏம் பாட்டி? பசிக்கலையா?"

"எனக்குப் பசியில்லைன்னா உனக்குப் பசிக்காதா என்ன? நமக்கு சுதாகர் சாப்பாடு அனுப்பறான்..."

"என்ன... யாரு?"

"நம்ப சுதாகர்தான். நூடுல்ஸ் பிரமாதமாய் செய்வான். கூடவே ஜிஞ்சர்சிக்கன் சாலட்..."

"ஓ... மெனுவை சொல்லிட்டாரா?"

"வாராவாரம் எனக்கு இதே மெனுதான்! பிரியமாய் செய்து எடுத்துட்டு வருவான். நானும் ரசிச்சு சாப்பிடுவேன்."

"இப்படி அந்நியர் சமைக்கறதை எல்லாம் சாப்பிடறது சரியில்ல."

"சுதாகர் அந்நியனில்லை. இங்கே வந்து நாலு மாசமாச்சு. ஏதோ புத்தகம் எழுதறானாம்."

இப்போது லலிதா உண்மையாகவே ஆச்சரியப்பட்டாள்.

"அவரைப் பார்க்க எழுத்தாளர் மாதிரி இல்லையே?"

"தினம் ஜாகிங், எக்ஸர்சைஸ்னு செய்து உடம்பைக் கவனிச்சுப்பான்."

"நான் அதைச் சொல்லலை."

"பின்னே?"

"ஒரு மாதிரி முரடனாய் தெரியறார். அதாவது..."

"முரட்டு முட்டாள்ங்கறியா? ஏன் அவனை பிடிக்கலைடா உனக்கு?"



"பிடிக்குது பிடிக்கலைங்கற அளவு நான் அவரோடப் பழகலையே..."

தயக்கத்துடன் தோள் குலுக்கினாள்.

"நீ அந்தப் பையன் திவேஷை மன்னிச்சிடணும் லலிம்மா... அவன் மேலுள்ள வெறுப்பை எல்லா ஆண்களின் மீதும் படர விடக்கூடாது. அணைக்கட்டின் சிறு ஓட்டை போல ஆரம்பிக்கும் துவேஷ உணர்வு பிறகு பெரிதாகி அணையையே உடைக்கறாப்பல நம்ப வாழ்க்கையை சிதறடிக்கும்."

ஆழ மூச்செடுத்து அறிவுரை சொன்ன பாட்டியைப் பார்த்தாள் இவள். "நீங்களும் இன்னும் கொஞ்சம் ஜாக்ரதையாய் இருக்கணும் பாட்டிம்மா... இப்படி யார்னு தெரியாதவர்களை வீட்டுக்குள் சேர்க்கறதும் ஆபத்துதான். அணையில் ஆரம்பமாகும் ஓட்டை போலத்தான்."

"அப்படி ஒரேயடியாய் பயந்தால் வாழ முடியாதேடா லலி. நம்பிக்கையும் தைரியமும்தான் வாழ்க்கையைச் சுலபமாய் செலுத்தற சக்கரங்கள்."

மீண்டும் தோள்களைக் குலுக்கினாள் பேத்தி.

"உங்க இஷ்டம்... ஆனால்..."

தொலைபேசி ஒலித்தது.

எதிர்பாராத அந்த சத்தம் கூட லலிதாவை உலுக்கியது.

"விசாலியாய்த்தான் இருக்கும்... வேற யாரு?" என்றபடி தொலைபேசி குழாயை எடுத்தார் மெர்ஸி.

போனில் அரட்டை அடிக்கும் அளவு சிநேகிதம் பாட்டிக்கு அவருடன் வேலை பார்த்த விசாலத்திடம்தான் என்று லலிதா கேள்விப்பட்டதுண்டு.

ஆனால் கருவியிலிருந்து கரகரத்த குரலைக் கேட்ட பாட்டியின் முகம் மாறியது.

"யார். ஓ மேஜரா?"

"—"

"மன்னிக்கணும். நான் கவனிக்கிறேன்."

"—"

"வேணாம் லாரி.. இப்பவே கிளம்பி வர்றேன்."

"—"

"ஆகட்டும். மறுபடி மன்னிப்பு கேட்டுக்கறேன்."

போனை வைத்து விட்டு நீள மூச்சு விட்டார்கள்.

"யாரது பாட்டிம்மா உங்களை இப்படி மிரட்டறது? சுதாகர் தானே?"

மெர்லி மிருதுவாய் புன்னகைத்தாள்.

"இல்லடா. இது மேஜர் லாரி. அஞ்சு நிமிஷம் நடந்தால் அவர் வீடு."

"இருக்கட்டும். அவர் ஆர்மி கெடுபிடியை உங்ககிட்ட ஏன் காட்டறார்?"

"நீ நடக்க வெளியே போன போது வெளி கேட்டைச் சரியாய் மூடலையாம் இருக்கும்... காற்றுக்கு கதவு விரிந்திருக்கும் நம்ப ரெக்ஸும் கின்னிக்கோழியும் வெளியே ஓடி மேஜர் தோட்டத்துல விஷமம் பண்ணியிருக்காம்."

"ஐயம் ஸாரி பாட்டிம்மா... கவனிக்காமல்... அஜாக்ரதையாய்."

"அதை விடு. இப்ப நான் அவர் வீட்டுக்குப் போகணும். ரெக்ஸை அடைச்சு போட்டிருக்காராம். கின்னிக்கோழி அவருக்கு டிமிக்கி கொடுத்திட்டு மர உச்சியிலே போய் உட்கார்ந்திருக்காம். ஷூட் பண்ணிடுவன்னு கேட்கறார்."

"ஐயோ.. இதென்ன அராஜகமா இருக்குது. உங்களுக்கு எதுக்கு இந்த வம்பெல்லாம் பாட்டிம்மா? உங்ககிட்டயே மனுஷர் இப்படி பேசறாரா."



"அவர் சமீபமாய்தான் ஏற்காட்ல வந்து செட்டில் பண்ணியிருக்காருடா. இங்கே வீட்டை முன்னமே வாங்கிப் போட்டிருந்தாலும் பிள்ளைகளை எல்லாம் ஸெட்டில் பண்ண பிறகு இங்கயே தங்கிடலாம்ன்ற முடிவோட வந்திருக்காராம். மனைவியும் இறந்தாச்சு போல. ஒரு நாள் அவரைப் போய் பார்க்கணும்னு நினைச்சேன். இப்ப இப்படி ஒரு சூழ்நிலையில் சந்திக்க வேண்டியதாய் போச்சு."

பேச்சோடு சால்வையை உதறிப் போர்த்திய பாட்டி, குடை, டார்ச் சகிதம் கிளம்பிய நேரம் கதவு தட்டப்பட்டது.

"திறம்மா.. மேஜர் நேரே துப்பாக்கியோட வந்துட்டாரோ என்னவோ?"

சற்றுத் தயக்கத்துடனே கதவைத் திறந்தாள் லலிதா.

கதவிற்குப் பின் நின்றது சுதாகர்.

ஒரு பெரிய மரத்தட்டில் பாத்திரங்களுடன் நின்றான்.

"ஓ.. வாங்க."

மேஜரை எதிர்பார்த்த அச்சத்துடன் கதவு திறந்தவளுக்கு ஆசுவாசம். சுதாகரைப் பார்த்து சின்னதாய் புன்னகைக்கக் கூட முடிந்தது.

"என்ன டீச்சர் குடையும் சால்வையுமாய்? என் சமையலேருந்து தப்பிக்கிற திட்டமா?"

இரு பெண்களுமாய் சேர்ந்து விவரம் சொன்னார்கள்.

"இதுக்கு நீங்க ஏன் அலையணும். நான் போறேன். எல்லாம் சூடாயிருக்கும் போதே சாப்பிடுங்க. அப்பத்தான் சுமாராகவாவது இருக்கும்."

"வேணாம்ப்பா. மேஜர் கோபமாய் கத்தினார். நான் போனால் கிழவின்னு மனமிரங்கி நாய், பறவையை விட்டிடுவார். நீ போய் விவகாரமாகிட்டால்?"

"நான் அவ்வளவுக்கு முரட்டு முட்டாள் இல்லை." என்றபடி இளம்பியவனை வெறித்தபடி நின்றாள் லலிதா. அவளுள் திகைப்போடு சிரிப்பும் குமிழ் விட்டன.

## 6

"என்ன நாம பேசினதை ஒட்டுக் கேட்டுட்டானோன்னு பார்க்கறியா?" குறும்பாய் நகைத்தாள் முதியவள்.

"ம்ம்.. எப்படி அதே வார்த்தைகளை..?"

"அவன் எழுத்தாளனில்லையா? சூட்சுமம் ஜாஸ்தி."

பாட்டி கவிழ்த்திருந்த தட்டுகளைத் திறந்து உணவை எடுத்து பரிமாறலானார்கள்.

"இருக்கட்டுமே.. அவர்.. அவரும் வந்ததும் நாம சேர்ந்தே சாப்பிடுவோம்.."

சொன்ன லலிதாவை சற்று வியப்போடு பார்த்த பாட்டி தலையாட்டினார்கள்.

"இல்லடா.. வழக்கமாய் நானும் அவனுமாய் சேர்ந்து தான் சாப்பிடுவோம்.. ஆனா இப்ப நீ என்னோட இருக்கறதால தான் வரலைன்னுட்டான்."

"ஓ..?"

சற்று ஏமாற்றத்துடனேயே தன் குரல் ஒலிப்பதை லலிதா ஆச்சர்யமாய் உணர்ந்தாள்.

"சற்று பொறுத்து சாப்பிடுவோமே பாட்டியம்மா.. அங்கு என்ன ஏது ஆச்சென்று தெரிஞ்சதும்.."

"அதெல்லாம் சுதாகர் நல்லபடி முடிச்சுட்டு வருவான். நடந்துட்டு வந்த உனக்குப் பசிக்கும் உட்காரு."



ஆவி பறந்த உணவு பரிமாறப்பட்டது. கூடவே முள் கரண்டிகள்.

"சீன உணவை சாப் குச்சிகள் இல்லாட்டினாலும் இப்படியாவது சாப்பிட்டாதான் ருசி."

"ம்ம்.."

முதல் வாயை மென்ற லலிதா புருவங்கள் உயர்ந்தன.

"என்ன.. அவன் சாப்பாடும் சகிக்கலையா?"

பாட்டி சீண்டினார்கள்.

"இல்ல.. ரொம்ப நல்லாயிருக்குதே..?"

"சுதாகர் வந்த பிறகு என் நாட்களும் நல்லாவேப் போகுதடா லலி.. தனிமை சமயங்களில் கொடுமையானது.. தனியாய் இருந்து தான் சேவை செய்ய முடியும்னு நினைச்சேன்.. ஆனா காற்று அதிகமாய் வீசினாலும் விளக்கு அணையும். காற்றே இல்லாமல் போனாலும் விளக்கு எரியாது இல்லையா?"

"ஏம்பாட்டி நீங்கக் கல்யாணமே செய்துக்க நினைக்கலையா?"

பாட்டி சற்று நேரம் ஏதோ யோசனையில் அமிழ்ந்தார்கள். "இருபது வயசிலேயே கான்வென்டில் டீச்சராய் சேர்ந்தேன். அங்கிருந்த கன்னியாஸ்திரிகள் அன்பை, சேவையை பார்த்த எனக்குத் திருமண வாழ்க்கை ஒரு தன்னலமான... ஏன் கீழ்த்தரமான விஷயமாய் கூட பட்டது. அது அறியாத வயசின் அறியாமைன்னு வையேன். 'ஒவ்வொருத்தரின் வாழ்க்கைக்கும் கடவுள் வெவ்வேறு நோக்கம் வச்சிருக்கார்'னு எங்கம்மா எவ்வளவோ சொல்லியும் கூட கல்யாணம் வேண்டாம்னு நின்னுட்டேன்.. இளமையில தடுமாறலன்னாலும் முதுமையில் தான் தனிமை பாரமாயிருக்க.. இப்ப கடவுளாய் அனுப்பனாப்பல சுதாகர் வந்தான்.."

"முன்னே வந்தவனும் கடவுள் அனுப்பி வந்தவன் தானா? அப்ப ஏன் உங்க வெள்ளிப் பாத்திரத்தோட ஓடினான்.."

"அவனை விடுடா.. சுதாகர் பண்பும் பாசமுமான பையன்.."

வனிதா கிருகிருவென சிரித்தாள்.

"என்ன?"

"ஆறடி உயரப் பையன்!"

"உருவத்தை மட்டும் வச்சு யாரையும் கணிக்கக் கூடாதுடா.. எளிமையாய் அத்தனை வேலையிலும் உதவி செய்றானே.. நாய்களைக் குளிப்பாட்டுவான்.. எனக்கு வேண்டிய அத்தனை ஷாப்பிங்கும் இப்ப அவன்தான். எனக்கு ரெண்டு மாசத்துக்கு முன்னே காய்ச்சல் வந்து கண்ணைத் திறக்கவே முடியலை.. டாக்டரைக் கூட்டிட்டு வந்தவன் இங்கேயே மூணு நாள் தங்கி எனக்கு மருந்து, சாப்பாடு தந்து கவனிச்சுக்கிட்டான்."

"ம்ம்."

"என்ன புருவத்தைச் சுருக்கிகிட்டு யோசிக்கறே?"

"ஆதாயமில்லாம யாரும் இப்படி.. எதுக்கு..?"

"அவனை சலிச்சுக்கிட்டே சாப்பிடாத ரசிச்சு சாப்பிடு."

தோளைக் குலுக்கியவள் சாப்பிடலானாள்.

தட்டுக்களைக் கழுவிய போது கேட்டாள்.

"பாட்டிம்மா, மேஜர் வீடு எந்தப் பக்கம்?"

"மெயின் ரோட்டுக்குப் போய் போஸ்ட் கம்பத்துல இடது பக்கமாய் திரும்பணும்."

"வாசல்ல பெயர் பலகை இருக்குமா?"

"இருக்கலாம்.. நான் கவனிச்சதில்லை. ஆனால் மேஜரின் வீட்டுத் தோட்டம் பிரமாதமாய் உருவாகிக் கிட்டிருக்குன்னு கேள்விப்பட்டேன். முன்னமே அப்பப்ப வந்து தோட்டம் எப்படி இருக்குதுங்கிறதைச் சொல்லிட்டுப் போவாராம். வேறெங்கும் பார்க்கக் கிடைக்காத நிறங்கள்ல ரோஜாச் செடி வச்சிருக்காராம். இந்த வருஷம் சிறந்த தோட்டத்துக்கான பரிசு தனக்குத்தான்னு பெருமையாய் சொல்லிட்டிருக்கார்."



"ஓ.. அதான் அத்தனை ஆங்காரமாய் கத்தினாரா?"

"மனுஷ இயல்பு தானேம்மா?"

"அவர் வீட்டைச் சுற்றின வேலி சரியாய் இருந்திருந்தால் ரெக்ஸ் எப்படி உள்ளே போயிருக்கும்? கிள்ளிக்கோழி நாலு புழுவைக் கொத்திச் சாப்பிட்டதில என்ன சேதமாயிருக்கும்?"

"மூணு பேருக்குமாய் டீக்குத் தண்ணி வைக்கிறேன். சுதா இப்ப வந்திடுவான்."

பதில் வரும் முன்னமே பாட்டி கழட்டி போட்டிருந்த சால்வையைப் போர்த்தியவள் டார்ச்சுடன் கிளம்பி விட்டாள்.

"இந்த இருட்டிலேயா?"

"என்ன பயம்.. போயிட்டு சுதாகரோடயே திரும்பிடறேன்."

இந்த முறை கேட்டைக் கவனமாய் தாழிட்டுக் கிளம்பினாள். குளிர் காற்று காதுகளைக் கிள்ளியது.

கைகளை இறுக்க கட்டியபடி விரைவாய் நடந்தாள்.

எதற்கு திடீரென்று கிளம்பினோம் என்பது அவளுக்கும் விளங்கவில்லை.

பாட்டி சொன்ன திசையில் நடக்க, அந்தப் பகட்டான வீடு தெரிந்தது.

வீட்டின் முன்பு பரப்பப்பட்டிருந்த தோட்டமும் பகட்டுதான்.

பால் முட்டை பல்புகளின் மிருதுவான ஒளியில் தோட்டத்தின் பச்சையும், மலரின் நிறங்களும் வசீகரமாய் தோன்றின.

சதுரப் பச்சையில் சிலும்பிய கொரியன் வெல்வெட் புல்வெளி. அதன் விளிம்புகளில் சிலிர்த்த சிவப்பு சால்வியாக்களும் நீல ஜாப்பின்களும் மாறிமாறி நின்றன. அந்நிறங்களைப் பார்க்கவும், பழைய ஈஸ்ட்மென் வண்ணத் திரைப்படங்களில் பார்த்திருந்த போலீஸ் கான்ஸ்டபின் தொப்பி தான் நினைவிற்கு வந்தது. சிறுமியாய் அவள் அதேபோல உயரத் தொப்பி

வளர்ந்து. அதற்கு ஊதா, சிகப்பு என்று மாறிமாறி வர்ணமடித்த துண்டு.

வீட்டினுள் நுழையலாமா.. என்று தயங்கியவள் பேச்சுக் குரல் கேட்க, குரல் கொடுப்பது என்று முடிவெடுத்தாள்.

ஆனால் அந்தக் குரல் சுதாகருடையது என்பது புரிய.. மீண்டும் தயக்கம். பாடலோடு இழையும் குழலோசைப் போல அவன் பேச்சோடு ஒரு பெண்ணின் சிரிப்பும் கலந்து கேட்டது.

விசாலமான முன்புற போர்டிகோவில் வந்து நின்றனர் ஒரு ஆணும் பெண்ணும். ஆண் சுதாகர் தான்.

மங்கிய மின் ஒளியில் அவளது உயரமும் அகலமும் கம்பீரமாய் தெரிந்தன. என் ஒயிலும் ஒய்யாரமும் அதற்கு சற்றும் சளைத்ததல்ல என்ற அழகுடன் இருந்தாள் அப்பெண்.

இருவரும் சகஜமாய் சிரித்துப் பேசினார்கள்- ஏனோ அந்தக் காட்சி லலிதாவிற்கு பிடிக்கவில்லை.

கசப்புடன் பார்த்தவளுக்கு கூப்பிட குரலும் எழும்பவில்லை.

“அப்ப நான் வர்றேன் ஷாலினி.”

“கண்டிப்பாய் சீக்கிரம் வரணும் சுதாகர்.. மேஜர் மாமாவிடம் வர்றதாய் சொல்லியிருக்கீங்க” பெண் கொஞ்சினாள்.

“ரெக்ஸை திறந்து விட்டீங்களா?”

“ஷ்யூர். ஆனால் உங்கக் கோழியை எப்படி மரத்தை விட்டு இறக்கப் போறீங்கன்னு தெரியலை..”

தன் குரலைக் கேட்டால் தீனி கிடைக்கும் என்ற ஆவலில் கின்னிக்கோழி நிமிஷத்தில் கீழிறங்கும் என்று லலிதா நினைத்த நேரம் சுதாகர் அந்த மரத்தின் கீழே நின்று ஒரு விநோத சப்தம் எழுப்பினான்.

பறவை மறு நிமிஷம் கீழுத் வேண்டியங் செய்தது!



நான்கு நாட்களே பழகிய தன் குரலுக்கு அவை மசியுமானால் நான்கு மாதங்கள் பரிச்சயப்பட்ட அவன் குரலுக்கு மதிப்பின்றி போகுமா..?

இது தனக்கு ஏன் தோன்றவில்லை?..

இந்தத் தாழ்வுணர்வுடன் நின்றாள் லலிதா.

பகட்டாய் மின்னிய அந்த ஷாலினியின் முன் போய் நிற்கவும் கூசியது. வெளிச்சுவரின் கரிய நிழலில் அண்டி, மறைந்து நின்றாள்.

பின்னர், இப்படி ஏன் நிற்பது என்ற சங்கடம் தோன்ற 'விடுவிடு' என்று திரும்பி வீடு நோக்கி நடக்கலானாள்.

ஷாலினி அவிழ்த்து விட்ட ரெக்ஸ் உற்சாகமாய் குரைத்த சத்தம் கேட்டது.

“இதோ போகலாம்.. ஏன் இங்கே ஓடி வந்தே.. ம்ம்?” என்று சுதாகர் நாயை அதட்டுவதும் அதற்கு அப்பெண் ஷாலினி ஏதோ சொல்ல இருவரும் சேர்ந்து சிரிப்பதுமாய்.. அந்த சப்தம் இவளை மேலும் துரத்தியது.

லலிதா வீடு வந்து சேர்ந்து மேலும் 15 நிமிடங்கள் ஆன பிறகே சுதாகர் வந்து நுழைந்தான்.

“என்னாச்சப்பா.. உக்காரு.. இந்தா டீ. குடிச்சுட்டே சொல்லு.. ரெக்ஸ் எங்கே?” நீட்டப்பட்ட தேநீர் கோப்பையை வாங்கியவன் ஒரு வெற்றி சிரிப்பு சிரித்தான்.

“அதுகளை பத்திரமாய் கூண்டிலே அடைச்சுட்டுதான் வரேன்.”

“நன்றிப்பா..”

“டபுள் தாங்க்ஸ் சொல்லணும் டீச்சர். ஏன்னா வர்ற சனிக்கிழமை நமக்குத் தேநீர் விருந்து!”

“அதெங்கே?”

“மேஜர் வீட்டில்தான்.”

"நிஜந்தானா..?"

"ம்ம்... எனக்கு கட்லட், ரவா கிச்சடி எல்லாம் தந்து உபசரித்தார்."

"துப்பாக்கி ரவைதான் கிடைக்கப் போறதுன்னு நினைச்சேன். அந்தளவு காரமாப் பேசினார் மனுஷன்?"

"அதெல்லாம் நீங்க யாருனு தெரிஞ்ச பிறகு இருக்குமா? நாற்பது வருஷம் நம்மூர் கான்வென்ட்ல வேலை பார்த்த டீச்சர் நீங்கன்னு தெரிஞ்சதும் மனுஷர் அப்படியே பல்டிதான்... மன்னிப்பு கேட்கிற விதமாய் தான் இந்த அழைப்பு?"

"ஆனாலும் இது பெரிய பல்டிதான்!"

சிரித்தாலும் மோர்லியின் முகத்தில் சிந்தனையும் முடிச்சிட்டிருந்தது.

## 7

பிறகு வேலைகளை விரைவாய் காலை ஒன்பதுக்குள் லலிதா முடித்து விட, சொச்ச நாள் அனகோண்டா பாம்பாய் நீண்டு அவளை மிரட்டியது.

நாளாந்த பொழுது மனிதனைப் பாம்பாய் சுற்றி இருக்கும் என்பது அவளுக்கு இப்போதுதான் புரிந்தது. இதுவரை நேரம் போதாமல் தவித்தவள் அவள். அமெரிக்கா, ஆப்கானிஸ்தான் தாக்குதல், மறு வெடிப் பேச்சு எல்லாம் டி.வியில் பார்த்த பின் ஏனோ சீரியல்களைப் பார்க்க முடியவில்லை. உலகின் கோர நாடகங்களைப் பார்த்தவளுக்கு சீரியலின் நாடகத்தனங்கள் [illegible] மனமில்லை.

[illegible] மனம் சற்று ஆசுவாசப்படும் என்று பட்டது.



"பாட்டிம்மா உங்கப் பள்ளிக்கூட லைப்ரரிக்குப் போய் நாவல் ஏதேனும் எடுத்துட்டு வரவா? ஸம் லைட் ரீடிங்..."

"ஆகட்டும்டா... பொழுது நகரல்லையா? லைப்ரரி வின்னிடாதான் உனக்குத் தெரியுமே. நானும் போன்ல சொல்றேன். அப்படியே ஆட்டோவுக்கும் சொல்றேன்."

"அது எதுக்கு."

"அப்ப சுதாகரோட போறேங்கறியா?" லலிதாவிற்கு சிரிப்பு தாளவில்லை.

"மூட்டு வலி வாதம்னு ஏதுமில்லாம எங்கால் சரியாய்தானே இருக்குது?"

"அப்படியே இருக்கட்டும். ஆனா முக்கால் மணி நேர நடைடா..."

"எனக்குப் பொழுது போகணுமே. நடந்து நகர்த்தறேன்..."

"உன் இஷ்டம்."

தனக்கு இஷ்டமில்லை என்ற தொனியில் சொன்னார் மோர்லி.

கதவு தட்டப்பட்டது. லலிதா ஓடிப் போய் திறக்க, வாசலில் நின்றது சுதாகர்.

அவன் கையில் புதுப் பளபளப்பு மாறாத ஆறேழு புத்தகங்கள். கலிட்ச் போட்டது போல லலிதாவின் கண்களில் ஒளி. கும்பிடப் போன தெய்வமே தேடி வந்து கடாட்சித்தது போன்ற பரவசச் சிரிப்புடன் புத்தகங்களைப் பார்த்தாள்.

"வாப்பா... ஏன் அங்கேயே நிக்கறே?"

அவன் நமுட்டாய் லலிதாவையே பார்க்க, அவளுக்கும் சிரிப்பு குமிழிட்டது.

"வாங்க" என்றாள் அழுத்தமாய்.

பவ்யமாய் நுழைந்தான்.

"இதென்ன புக்ஸ்?"

"உங்களுக்கு நேரம் போகாதுன்னு தெரியும். அன்னைக்கு ஹிட்ச்காக்கின் ஒரு பழைய திரில்லரை நடு ராத்திரி வரை பார்த்தீங்களாம். மற்றபடி அதிகம் டி.வி. பார்க்கற நிலைமைங்கறதால வாசிப்பீங்கன்னு எடுத்துட்டு வந்தேன்."

"தாங்க்ஸ் ரொம்ப தாங்க்ஸ்."

உவகையுடன் வாங்கிக் கொண்டாள். தன்னையும் மீறி மனம் நெகிழ்ந்தது. கவனித்து, கரிசனையுடன், சரியான நேரத்தில் செய்த உதவியல்லவா?

"புதுசாப் தெரியுதே?"

"பப்ளிக் ஸ்கூல் போயிருந்தேன். ஒரு கட்டுரைப் போட்டிக்கு என்னை நடுவராக்கி முப்பது கட்டுரைகளைத் தந்திருந்தாங்க. பிரின்ஸிபலிடம் முடிவுகளைச் சொல்லிட்டு அப்படியே அவர் பர்சனல் லைப்ரரியில் இருந்து எடுத்தேன்."

புத்தகங்களைப் புரட்டியவள் குஷியாய் சொன்னாள். "கச்சிதமாய் தேர்ந்தெடுத்திருக்கீங்க. கனமான சப்ஜெக்டல்ல வாசிக்கிற மூடில் நானில்லை. இந்தக் குளிருக்கு விறுவிறுப்பாய் போற கதைகள்தான் தோது. குறிப்பாய் இந்த ஸிட்னி ஷெல்டன் நான் வாசிக்கணும்னு நினைக்க நேரமில்லாமல் போனது."

"எல்லாத்துக்கும் அதுக்கான நேரம் வரணுமே."

பாட்டி சுதாகருக்கு பிஸ்கட்டுகளை நீட்டியபடி சொன்னார்.

"இந்த ஞாயிறு அதாவது நாளை கோவிலுக்கு வரீங்களா?" அவன் போன வாரம் அவன் செய்த வீம்பை மறந்தது போல இயல்பாகக் கேட்க லலிதாவும் இனிமையாகவே ஒப்புக் கொண்டாள்.

"வரேன். நீங்களும் வரலாமே பாட்டிம்மா?"

"அதை நாளைக் காலை பார்ப்போம். கால் மூட்டார் எந்நிலையில் இருக்கா என்பதைப் பொறுத்து முடிவெடுப்பேம்."



"உங்களுக்கு டீ போடவா?"

தன்னைப் பார்த்து கனிவுடன் கேட்டவளைப் பார்த்து தன் அடர்ந்த புருவங்களைச் சற்று மேலே ஏற்றினான்.

"நோ தாங்க்ஸ். ஸ்கூல்ல குடிச்சேன் வரட்டா?"

"மறுபடி நன்றி."

புத்தகங்களை அணைத்தபடி துள்ளலாய் படியேறியவளுக்குத் தன் மனதின் துள்ளல் புரியவில்லை. ஆனால் பிடித்திருந்தது. காலையில் உணர்ந்த சலிப்பு போன இடமே தெரியவில்லை. அப்போது வரண்டிருந்த தன்னில் திடீரென்று எப்படி இத்தனை உற்சாகம். தனது இப்போதைய ரசனைக்கேற்ற புத்தகங்கள் தேடி வந்ததாலா? அல்லது தன் தேவையைத் துல்லியமாய் உணர்ந்து அதை நிறைவேற்ற ஒருவன் உண்டு என்கிற பெருமிதமா?

இந்த சில நாட்களில் சுதாகரை தன் மனம் ஏற்றுக் கொண்டு விட்டதா? பற்ற வைத்தத் திரி சுருங்கிக் கொண்டே போவது போல அவன் செய்கைகளால் தன் வெறுப்பு குறைந்து கொண்டே போய் இப்போது இல்லவே இல்லையோ?

தன் அச்சம் புரிந்து ஒதுங்கி நின்ற கண்ணியம்.

அலுப்பு புரிந்து புத்தகங்களைக் கொண்டு வந்த கரிசனம்.

அல்லது தான் இங்கு வருவதற்கு முன்பிருந்தே மௌனி பாட்டி மீது அவன் காட்டிய கருணை?

அழகான இளம் பெண்களுக்கு உதவும் இளைஞர்கள் சகஜம். ஆனால் வயதானவர்களுக்கு உதவ நிஜமான அன்பு உள்ளம் தேவை.

அவள் வயதுக்கே உரிய குறும்புடன் புத்தி இடித்தது.

"அது மட்டுமில்லை. ஆசாமி கம்பீரமானவன் ராம்ப்பில் நடந்து வரும் ஆண் மாடல் போலில்லை அந்த நடை? கன்னில் கிளம்பி பின்னரே உதட்டுக்கு இறங்கும் அந்தப் புன்னகை?"

புத்தியின் இந்த சில்மிஷ எண்ணங்களை அவசரமாய் ஒதுக்கினாள். நாவலுடன் வாசிக்கத் தோதான திசையில் நாற்காலியை இழுத்துப் போட்டாள்.

'நாம் வாசிக்கும் போது வெளிச்சம் எப்பவும் நம் பின்னாலிருந்து நம் இடத்தோளின் வழியே புத்தகத்தில் விழுவது நல்லது' என்று ஒரு ஆசிரியைச் சொல்லித் தந்ததை லலிதா மறந்ததில்லை.

ஜன்னலை நெருங்கியவளின் கண்கள் வெளியேத் தெரிந்த காட்சியில் லயித்தன. நாய்களின் கும்மாளத்திற்கு ஈடுகொடுத்து அவற்றோடு சிறுவனாய் விளையாடிக் கொண்டிருந்தான் சுதாகர்.

அந்த குதூகலம் அவனைப் புதிய கோணத்தில் காட்டியது.

அத்தனை ஆவலுடன் வாசிக்க ஆரம்பித்த புத்தகத்தில் …மிழ முடியாமல் ஏதேதோ சிந்தனைகள் அவளைச் சீண்டின.

ஒரு ஸ்ட்ராங் காபி போட்டுக் குடித்தால் தான் இனி …பிடும் என்ற நினைப்புடன் படியிறங்கினாள்.

பேச்சுக்குரல் கேட்டது.

சுதாகர் இன்னும் போகவில்லையா?

அவள் அறைக்குள் எட்டிப் பார்க்க பேசிக் கொண்டிருந்த …டியும் சுதாகரும் 'கப்'பென்று வாய் மூடினார்கள். அவர்கள் …ங்களில் புதுக்குழப்பம்.

மறுநாள் ஆலயத்தில் அவன் அருகே அமர்ந்திருந்தது …மாய் இருந்தாலும் பிடித்திருந்தது.

…உலகில் தனிமையாய் இருக்க நேருவது கொடுமை. சில …போர்கள் குழுமியிருந்த ஆலயத்தில் தான் தனியே தீவாய் …மற்றவர்களோடு உட்கார்ந்திருந்தால் சுயபச்சாதாபம் …ப்போது மேலேறி ஆராதனையில் லயிக்க விடாமல் … வைத்திருக்கக்கூடும்.



இயல்பாய் சுதாகர் அவளருகே உட்கார்ந்தது முதலில் சற்று சங்கோஜமாயிருந்தாலும், 'எனக்கு யாருமில்லாமலில்லை' என்ற உணர்வு அந்த படபடப்பைச் சமாதானப் படுத்தியது.

அதோடு வேறு சில விவரங்களையும் லலிதா கவனிக்க நேர்ந்தது.

ஜபங்களை தெளிவாய் அர்த்தம் உணர்ந்து சொன்னான்.

பாடல்கள் அவன் குரலில் இனிமைக் கூடிக் கேட்டன.

இத்தனை சுருதி லயத்துடன் பாடக் கூடியவன் என்பது அவளுக்கு ஏனோ ஆச்சரியமாயிருந்தது.

ஆராதனை முடிந்ததும் வந்திருந்த எளியவர், பெரியவர் என்று பலரும் சுதாகருக்குப் பிரியமான பரிச்சய புன்னகைத் தந்தனர். எல்லாரிடமும் ஓரிரு வார்த்தைகள் பேசினான். கூடவே லலிதாவை அறிமுகப்படுத்தவும் தவறவில்லை.

"ஓ லச்சரம்மா பேத்தியா? சந்தோஷம்மா. அவங்களுக்கும் நீ வந்தது உற்சாகமாயிருக்கும். இல்லையா?" என்று இவளிடமும் பிரியம் காட்டினார்கள்.

அவன் பிறருடன் பேசும்போது அவனை முக்கியமாய் அவன் உடையை ஓரக்கண்ணால் அளவெடுத்தாள்.

இத்தனைக் கச்சிதமான தையல் 'ரேமெண்ட்ஸ்' போன்ற பிரபல ஆடைத் தயாரிப்புகளிலேயே இருக்கும் என்று யூகித்தவள், அவன் காலணிகளும் வெளிநாட்டுத் தயாரிப்பு என்பதைப் பார்த்தாள்.

இத்தனை நேர்த்தியாய் உடுத்தக் கூடுமானால் அவன் உத்யோகம் என்ன?

எழுத்து இத்தனைக் காசு கொண்டு தருமா?

"இத்தனைக் கஷ்டப்பட்டு என்ன யோசனை? என்னைப் பற்றித்தானே? என்னையே கேட்டால் சொல்லிட்டுப் போறேன்." என்ற அவன் குரல் அவளை உலுக்கியது.

"சேச்சே... சும்மா தான்."

மழுப்பலாய் புன்னகைத்தாள்.

ஆனாலும் ஊடே எப்படித் தன் எண்ணங்களை வாசித்து விடுகிறான் என்ற ஆச்சரியமும் ஓடியது.

"இப்ப சந்தைக்குப் போறோம். இந்த வாரத்துக்கான சாமான்களை வாங்கணும். பிறகு உங்களுக்குக் கேட்கும் பொறுமையிருந்தால் என்னைப் பற்றிச் சொல்றேன்."

"ம்ம்... போலாம்."

உள்ளே ஆவல் மிகுந்தது.

ஏரியைச் சுற்றி அன்று பல புதுக்கடைகள் முளைத்திருந்தன. கண்ணைப் பிடுங்கும் நிறங்களில் துணிமணிகளும், ஐந்து ரூபாய்க்கு மிகாத பாசிமணி, வளையல்கள் விற்ற கடைகளைத் தவிர மற்றவைகளில் காய்கறிகள், கனி வகைகள்.

பேரம் பேசும் குரல்கள், கூடவே குசலங்கள், தகவல்கள் என்று கதம்பப் பேச்சு.

'ஏ ஆச்சி, நல்லாயிருக்கியா? மாமு வரலியா?'

'அட... இது சித்ராப் பொண்ணா? எப்ப ஊருலேருந்து வந்தேப்பா? வெடுவெடுன்னு வளந்துட்ட?'

'நாப்பனா, உங்க சம்சாரம் ரெண்டு விறகுக்கட்டும் சேர்த்து வாங்கிப்போகச் சொல்லுக.'

கதாகர் பேரம் பேசாமல் எடுத்துப் போயிருந்த இரண்டு பைகளில் வாங்கி நிரப்பலானான்.

"என்ன உங்களைப் பார்த்ததும் எல்லாரும் 'ரோபோட்' மாதிரி மடமடன்னு நிறுத்துத் தந்துடறாங்க?"

"வெங்காயம், தக்காளி முதற்கொண்டு எல்லாம் ஒவ்வொரு வாரமும் அதே அளவுதான்... இந்த மஞ்சள் சாக்கு பக்கருக்கு தெரியும் என்னை."

"வாராவாரம் விலையும் மாறாதா என்ன?"



"அப்ப உள்ள மார்க்கெட் ரேட்டுக்குத் தந்திடுவாங்க. நாலும் நம்பி வாங்கிக்கறதுதான். ஏ.ஸி. ஷோரூம்ல போய் துணி, தங்கம்னு வாங்கறப்ப நாம் பேரம் பேசறோமா? அவங்க சொல்ற விலைதான்?"

"ஆனா இங்கே இருபது ரூபாயில் ஆரம்பிச்ச பனிரெண்டுக்குப் பேரம் படியுதே?"

"வாங்கிறவன் பேரம் பேசுவான்னு எதிர்பார்த்து கடைக்காரர் சொல்ற விலை அந்த இருபது. சொன்ன விலைக்கு வாங்கினால் ஒரே விலையைச் சொல்லிட்டுப் போறார். அந்த எட்டு ரூபாயை மிச்சம் பிடிக்கறதுக்குப் பதிலாய், பத்து நிமிஷங்களை மிச்சம் பிடிக்கலாம்... அவருக்கும் தொண்டை வறளாது."

அவனைச் சற்று பிரமிப்புடன் பார்த்தாள். பைகளை கார் டிக்கியில் ஏற்றியவன் சூடான நான்கு மசால் வடைகளை வாங்கிக் கொண்டு காரைக் கிளப்பினான்.

சற்றுத் தொலைவில் சந்தடியற்ற ஏரிக்கரையில் கொண்டு நிறுத்தியவன், "வடை எடுத்துக்கோங்க லலிதா... நான் என்னை பற்றி சொல்றதுக்கு இதைச் சாப்பிடற நேரம் போதும்." என்றான் புன்னகையுடன்.

## 8

பதினைந்தே நிமிடங்களில் ஒருவன் தன் கடந்த காலத்தை, வாழ்வு பற்றிய விருப்பங்களை இத்தனை கோர்வையாகச் சொல்லக் கூடுமா?

லலிதா அசந்துதான் போனாள்.

'இவன் எழுத்தாளன் போல இல்லையே?' என்று பாட்டியிடம் கதாகரைப் பற்றி நக்கலடித்தது தப்பு என்பது புரிந்தது.

இத்தனை புத்திசாலி. கூடவே வசதியும் வாய்த்தவன் எத்தனை எளிமையாய் இருந்தான் என்ற வியப்பு உள்ளே பலூன் போல பருத்தது.

தெரு நாய்களைக் குளிப்பாட்டி. பூனைக்குட்டி ஈரம் பண்ணினால் துடைத்து. காய்ச்சல் வந்த பாட்டியை உடனிருந்து கவனித்து அவர்களுக்காய் ஷொப்பிங் செய்து சமைத்து. எரிச்சல் காட்டிய தனக்குத் தேவைப்பட்ட சமயத்தில் புத்தகங்கள் கொண்டு வந்து.. எல்லாம் அவன் கரிசனைக்குச் சான்று..

ஏன் இத்தனை நாட்களாய் இதில் ஏதும் தன் கண்களில், கருத்தில் படவில்லை? திவ்வேஷ் மீது தனக்கிருந்த காட்டம் பிற ஆண்களின் மீதும் பாய்ந்திருந்ததோ? தன் கணவனின் தோல்விக்கு பிறரையே குற்றம் சாட்டிய அம்மாவின் கசப்பு குணம் கூடத் தன்னில் பரவியிருக்கலாம்.

அன்று ஏதோ கடுப்பாய் பேச கனிவாய் பாட்டி அறிவுறுத்தினார்கள்.

'அதிக மழையடிச்சாலும் மலர்கள் உதிர்ந்து அழுகிடும் லலி.. உங்கம்மா சதா பண்ணின தப்பான உபதேசம் கூட உன் எண்ணங்களை அழுகலாக்கிடுச்சு. மனசை இறுக்காதே... காற்றோட்டமாய் வை.'

உண்மை தான். சிலரை மன்னிக்க விரும்பாத மனம் மொத்தமாய் பலரை வெறுத்துத் தள்ளுகிறது.

சுதாகரை பார்த்த கணமே மனம் முறுக்கிக் கொண்டதே.

ரவுடியாட்டம் உடை என்று உதடு பிதுக்கினளே.

ஏன் நானும் கூட அன்று மெல்லிசான கையற்ற சிவப்பு [illegible] நான் அவன் முன் நின்றாள்..

அவன் தன்னைக் கண்ணியக் குறைவாய் பார்க்கவோ நடத்தவோ இல்லையே?

சாலைக் கடையின் எண்ணெய் பட்டு பிசுபிசுத்த விரல்களை அவன் நீட்டிய துண்டு பேப்பரில் துடைத்தாள்.



காரின் ஒரு ஓரத்தில் இருந்த டப்பாவில் எண்ணெய் காகிதத்தை அவன் போடுவதைப் பார்த்தவள் தானும் அதே போல செய்தாள். அவன் நீட்டிய பாட்டிலிலிருந்து தாகமடங்க தண்ணீர் குடித்தாள். எல்லாவற்றையும் ஒரு ஒழுங்குடன்தான் செய்கிறான் என்ற பிரமிப்பு மேலும் பெருகியது.

"உங்கம்மா இப்ப ஆஸ்ட்ரேலியாவிலா இருக்காங்க?"

"ம்ம். அக்கா ஏரோபிக்ஸ் டீச்சர்.. அவளுக்கு மணியாய் ரெண்டுக் குழந்தைங்க. அதனால அம்மா சந்தோஷமாய் பேரன்களைப் பார்த்துக்கறாங்க... அந்த வாழ்வும் அவங்களுக்குப் பழகிடுச்சு."

"உங்க தாத்தாதான் உங்களுக்கு ரொம்ப நெருக்கம்னீங்க?"

"ம்ம். அப்பாக்கும் எனக்கும் பல விஷயங்கள்ல ஒத்துப் போகல. அதனால் தாத்தா எங்களுக்கிடையே பாலம் போட முயலுவார். அதிலேயும் சிக்கல் வரும்போது வேடிக்கையாய் சலிச்சுக்குவார். 'காட்டு மிருகங்களை விட இந்த வீட்டு மிருகங்களை சமாளிக்கறது கஷ்டம்'னு."

"உங்க தாத்தா மிருகங்களைக் காட்டில் தத்ரூபமாய் படம் பிடிக்கறவர்னீங்க. இப்ப மாதிரி 'டிஸ்கவரி', 'வைல்ட்-லைப்' சானல்ஸ் அப்ப இருந்திருந்தால் ரொம்பப் பிரபலமாயிருப்பார் இல்லையா?"

"அவருக்கான பரிசு, பாராட்டெல்லாம் குறைவில்லாம கிடைச்சது லலிதா. 'எம்மி' விருதே வாங்கிட்டார். சினிமாவிற்கு 'ஆஸ்கர்' போல வனவாழ்க்கை பற்றிய சிறந்த பங்களிப்பைத் தரும் கலைஞர்களுக்கான உயர்ந்த விருது அது."

"ஓஹோ."

"அவரிடமிருந்து வந்தது எனக்கு விலங்குகள் மீதான நேசம். வீட்ல நரி, பாம்பு எல்லாம் கூட வளர்த்திருக்கோம்."

நடுக்கமாய் உடல் சிலிர்த்தவளை சீண்டலாய் பார்த்தான்.

அந்த சீண்டல் அவளை வருடியது. வெட்கப்படுத்தியது.

அவன் கதை கேட்கும் ஆர்வத்தில். 'என்னை ஒருமையிலேயே கூப்பிடுங்க' என்று விட்டிருந்ததால் மேலும் நெருங்கி விட்டதான மனக்கதகதப்பு வேறு.

"தவிர, தாத்தா மனுஷங்க நுழைய முடியாத காட்டில் பரணில் பல நாட்கள் பன், பழம்னு கிடந்து ஒரு டைரி எழுதியிருந்தார். அதற்குப் பொருத்தமான புகைப்படங்களும் இருந்தன."

"சுவாரஸ்யமாய் இருக்குதே?"

"காட்டுக் கோயிலின் பூசாரிக் கிழவர் பற்றி ஆறேழு பக்கங்கள். அதை எல்லாம்தான் நான் புத்தகமாய் தொகுத்து எழுதிகிட்டிருக்கேன். எழுதுவதற்கான சூழல் இங்கே இருந்தது"

"அதாவது நான் வரும் வரை.."

தன்னை மீறி சொல்லி விட்டவள் அரை அசட்டுத் தனமாய் புன்னகைத்தாள். பேச்சை மாற்றும் முயற்சியில் தொடர்ந்தாள்.

உங்கப்பா சக்ஸஸ்ஃபுல் பிஸினஸ்மேன்னு சொன்னீங்க.. சமீபமாய் அவர் இறந்த பிறகு உங்க பொறுப்புகள் அதிகமாயிருக்கணுமே. ஒரேப் பையனான நீங்க பிஸினஸைக் கவனிக்காம புஸ்தகம் எழுத வந்திருக்கீங்க?"

"மச்சரும் இப்படித்தான் சொல்லி என்னை அப்பப்ப திருச்சிக்கு அனுப்பி விடுவாங்க. எங்க மெயின் ஃபாக்டரி அங்கதான். நம்பிக்கையான மேனேஜர்.. நம்பி விட்டுருக்கேன். தவிர நான் பிஸினஸ்மானேஜ்மெண்ட் படிச்சிருக்கறதால கம்பெனி கணக்குகளை பார்த்ததும் ஓரளவு புரிஞ்சிடும். எது தப்பு எது [illegible]"

"எந்த காலேஜ்ல எம்.பி.ஏ. பண்ணீங்க?"

"ஆஸ்ட்ரேலியாவில அக்கா இருந்ததால அங்கேப் போய் படிக்கலாம்னு தோணுச்சு.. ஆனாலும் எனக்கான பிசினஸ் [illegible]



"என்ன வேலை பார்த்து?"

"பெரிய பண்ணைகள் அங்கே நிறைய. அதிலே புல் வெட்டலாம். அப்படிப் பரிதாபமாய் பார்க்காதே லலிதா. அதுக்கான நவீன மெஷின்ஸ் உண்டு. மெனக்கெடறதுக் கேற்ற வருமானம் வரும். கார் மெக்கானிஸம் தெரியும். அதிலே சின்ன சம்பாத்தியம். சமையலும் கூட அங்கே கத்துகிட்டது தான்."

"அதான் சகலகலாவல்லவராய் இருக்கீங்களா?"

தன்னை மீறிப் பாராட்டி விட்டாள்.

"தாங்க்ஸ்" பணிவாய் தலை குனிந்தான்.

வீடு வந்து விட காய்கறிகளை இறக்கி பிரித்து பாட்டியின் குளிர்பதனப் பெட்டிக்குள் நேர்த்தியாய் அடுக்க ஆரம்பித்தான்.

"இதெல்லாம் நான் பார்த்துக்கறேனே." என்றாள் லலிதா சிறு குற்ற உணர்வுடன். போன ஞாயிறு அவன் இதையே செய்த போது அவள் விச்ராந்தியாய் பேப்பர் வாசித்துக் கொண்டிருந்தாள்.

"பழக்க தோஷத்துல செய்துட்டேன். வரேன்."

"இங்கேயே சாப்பிடலாமே?"

தன்னை மீறி இன்று அடிக்கடி பேசுவது உணர்ந்து குழம்பினாள்.

"இல்லை நேற்றுள்ள குழம்பிருக்குது. ரொட்டியோட சமாளிச்சிடுவேன்."

"உனக்கும் சேர்த்துதான் சமைச்சேன் சுதாகர். இது"

"சுதா இங்கேயே சாப்பிட்டால்?"

"ஒரு கேடுமில்லை. உன் சாமான்களை வேணும்னா வீட்ல கொண்டு வச்சிட்டு வா.."

உத்தரவிட்டார்கள் பாட்டி.

லலிதாவிற்கு பாட்டியின் அந்த அதட்டல் ஏனோ

சுதாகரின் சின்ன கூடையை எடுத்துக் கொண்டவன்,

"இதை நான் எடுத்துட்டு வரேனே?" என்றாள் சற்று கெஞ்சலாய்.

"நோ..நோ.. பெண்களை சுமக்க விடறதாவது? இது நான் அயல் மண்ணில் கற்ற பண்பு. இங்கே பெண்ணை சுமக்க விட்டு விட்டு கைவீசிட்டு நடக்கறப் பசங்களைப் பார்த்தால் இப்ப எரிச்சலாய் வருது.."

"உனக்கு மனைவியாய் வரப்போறவ பிரமாத அதிர்ஷ்டக் காரியப்பா."

"அதை எனக்குக் கல்யாணமாகி ரெண்டு வருஷங்கழிச்சு அவகிட்டதான் கேட்கணும். அவ முகாரி கூட பாடலாம் டீச்சர்.."

பாட்டியும் அவனுமாய் சேர்ந்து சிரித்த காட்சியை ரசித்தாள்.

"நான் வர்றது.. அதாவது கூடையைத் தூக்கிட்டு வர்றது சும்மா ஒரு சாக்குதான்.." ஒத்துக் கொண்டாள்.

"ஓஹோ? அப்ப மேடத்தின் நிஜ நோக்கம் என்ன?"

"உங்க தாத்தா எடுத்த படங்களை எல்லாம் பார்க்க ஆசை.."

அவன் முகம் மலர்ந்தது.

"ஷ்யூர்... ஆனால் அதையெல்லாம் அவசரமாய் புரட்டினாலும் கூட ஒரு மணி நேரமாயிரும்.."

"ஆகட்டும் சுதாகர். இப்பதான ஜூஸ் குடிச்சோம்.. மெல்லவே வாங்க.. பிறகு லஞ்ச் சாப்பிடுவோம்.."

"ரைட்"

ஒரு சிறுமியின் ஆர்வத்தோடு வனவாழ்க்கைப் பற்றிய புகைப்படங்களை ரசித்தாள் லலிதா.

பல கறுப்பு வெள்ளைப் படங்கள்தான் என்றாலும் வெகு கவித்துவமாய் இருந்தன. கிறுக்கலான கையெழுத்தில் நடந்த டைரியை முழுக்க நிரப்பியிருந்தார் பெரியவர்.

"இந்தக் கையெழுத்து உங்களுக்குப் புரியுதா?"



டைரியை வாசிக்க முயன்றவள் சந்தேகப்பட்டாள்.

அவளுக்கு அது என்ன பாஷையின் எழுத்து என்பதிலேயே சற்றுக் குழப்பம்.

"எனக்கு சின்ன வயசிலேருந்து தாத்தாவின் எழுத்தை வாசித்துப் பழக்கமாயிருச்சு. அதனால் பிரச்சினையில்லை. ஹாஸ்டல்ல தங்கிப் படிச்ச எனக்கு தாத்தா வாரம் ரெண்டு கடிதங்கள் எழுதுவார்.. அம்மாவும் எழுதுவாங்க என்றாலும் தாத்தாவின் கடிதங்கள் படுசுவாரஸ்யமாயிருக்கும்... ஊர், உலகச் செய்திகள் எல்லாம் அதிலிருக்கும்.. அவரது அனுபவங்களை என் ஃப்ரெண்ட்ஸ் கூட போட்டி போட்டு வாசிப்பாங்க."

"அவரோட காட்டுக்குப் போயிருக்கீங்களா?"

வருத்தமாய் தலையசைத்தான்.

"அம்மா பயந்து அதுக்கு அனுமதிச்சதில்லை. ஆனா இப்ப இதைத் தொகுத்து எழுதறப்ப நானே எல்லாவற்றையும் அனுபவிச்சது போலொரு உணர்வு."

அவன் துடிப்பான பேச்சை விழியெடுக்காமல் கவனித்தாள்.

மதிய உணவின் போதும் வாய் ஓயாமல் இளையவர்கள் இருவரும் பேசியதை, இடை இடையே அடக்க முடியாமல் சிரித்ததைக் கவனித்த முதிய முகத்தில் பெரிய நிம்மதி தெரிந்தது.. உதடுகளில் ஒரு நமட்டுச் சிரிப்பு வேறு..

மறுநாள் காலை லலிதா பெரும்பாலான சமையலை முடித்த நேரம் சுதாகர் பதட்டமாய் வீட்டிற்குள் வந்தான்.

"டீச்சர், லலிதாவை உடனே கூப்பிடுங்க.."

"என்ன விஷயம்.."

"அவகிட்ட கேட்க வேண்டிய விஷயம்.."

இடுப்பின் ஏப்ரனுடன் வந்த லலிதா சற்று கவலையுடன் கேட்டாள்.

"என்னாச்சு?"

"அன்னைக்குப் புத்தகம் எடுத்திட்டு வந்தது போல இப்ப உனக்குப் பொழுதுபோக்க இன்னொரு சமாச்சாரம். அதில் உன் விருப்பத்தைத் தெரிஞ்சுக்கத்தான்."

ஒரு வழியாய் அப்படி இப்படி சுற்றி இறுதியாய் மூக்கைத் தொட்டான். "கான்வென்ட் அக்கவுண்ட்ஸ் ஆபீசில் ஒரு வேலை காலியாகி இருக்குது தற்காலிகமாய்த்தான். செக்ரட்டரியாய் இருந்த ரூபிக்கு டெலிவரி சமயமாம்."

"இல்லையே அதுக்கு இன்னும் ஒரு மாசம் இருக்குதே? ரொம்ப சவுகர்யமாய் விடுமுறை சமயம்தான் என் பேபி பிறக்கப் போகுதுன்னு எங்கிட்ட சொன்னாளே ரூபி?"

"இப்ப வலி. ப்ளீட்டிங்னு ஏதோ சிக்கலாம் டீச்சர்."

"பாவம் பொண்ணு. நல்லபடி பெத்து எடுக்கணும்."

"ரூபிக்கு முழு ரெஸ்ட் தேவைன்னு உடனே வீட்டுக்கு அனுப்பிட்டாங்க. இன்னும் ஸ்கூல் மூட பத்து நாட்கள் இருக்குது. கணக்கு வழக்குகளை முடிக்கணும். பிறகு கிறிஸ்துமஸ் விடுமுறைதான். இந்த பத்து நாட்களுக்கு நீ உதவ முடியுமா லலிதா? நான் விஸ்டரிடம் ஒரு ஏ-க்ளாஸ் செக்ரட்டரி கைவசம் இருக்காங்க கவலைப்படாதீங்கன்னு சொல்லிட்டு வந்திருக்கேன்."

அவனுடைய பரபரப்பு லலிதாவையும் தொற்றிக் கொண்டது.

"ஓ எஸ்.. பாட்டியம்மா நீங்க என்ன சொல்றீங்க?"

"வேலை செய்யப் போறவ நீ. நீயே முடிவெடு."

"உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே?"

"தோடா.. நம்மால பிறருக்கு உதவின்னால் நாம செய்யத் தயாராய் இருக்கணும். அதே சமயம் இதில் உனக்கும் பலனிருக்குதே."

"ம்ம்.. உண்மைதான். என் மூளை துரு ஏறாம காப்பாற்றப் படும்." உற்சாகத்துடன் புது வேலைக்காய் தயாரானாள் லலிதா.



## 9

பழைய கசப்புகளை முற்றிலுமாய் மறக்க இப்புது வேலை வெகுவாய் உதவியது.

தண்ணீரை அடித்து ஊற்ற பழம் கசடுகள் வெளியேறுவது போல உள்ளே படர்ந்திருந்த கசப்புக்கள் கழண்டு வெளியேறின.

இது போதாது போல வேறு ஒரு இனிப்புச் சுவையும் லலிதாவின் நாட்களில் சேர்ந்திருந்தது.

தினம் சுதாகரே அவளைப் பள்ளிக்குப் போய் விட்டது தான் அது.

இச்சில நாள் வேலையை ஒத்துக் கொள்ளலாம் என்பது முடிவானதும் எழுந்த முதல் கேள்வி அதுதான்.

"எப்படி வேலைக்குப் போறது..?"

"கண்ணனைக் கேளுங்களேன் பாட்டிம்மா... தினம் ஆட்டோல.."

"ஏன் என் காருக்கு அந்தப் பாக்கியமில்லையா?"

குறும்பும் பாவமுமாய் கேட்டான் சுதாகர்.

"ஏறக்குறைய ரெண்டு வாரம் தினம் தினம் காலை எட்டரைக்கு உன்னை டிரைவர் வேலைப் பார்க்கணும்னு எதிர்பார்க்கறது அதிகமில்லையாப்பா?"

"இல்லை... ஏன்னா நானும் தினம் கான்வென்ட்டை அடுத்திருக்கிற பாய்ஸ் ஸ்கூலுக்குப் போக வேண்டியிருக்கிறது. கிரியேட்டிவ் ரைட்டிங்னு ஒரு கிராஷ் கோர்ஸை ஃபிரதர் பசங்களுக்கு அறிமுகப்படுத்தறார். இதைச் செய்தால்

கல்லூரியில் மாஸ் கம்யூனிகேஷன் எடுக்க நினைக்கும் மாணவர்களுக்கு அடிப்படை பலமாய் இருக்கும்னு நினைக்கிறார். இது விஷயமாய் பேசும் போது கான்வென்ட்ல செக்டரி வேலைக்கு ஆள் தேவைங்கறது தெரிஞ்சது உடனே போய் சிஸ்டரையும் பார்த்து பேசினேன்.."

"அப்பசரி.. வசதியாய் போச்சு.. ஆனால் திரும்ப வரும் போது.."

"நாலு மணி வரை லலிதாவிற்கு வேலை இருக்கும்.. அந்நேரத்துக்கு வேணும்னா ஒரு ஆட்டோவை ஏற்பாடு பண்ணிடறேன்... ஒரு வேளை நான் ஸ்கூல் பக்கம் போக வேண்டியதிருந்தால் என்னோட திரும்பிடலாம்."

வேலை இருந்ததோ இல்லையோ.. மாலையிலும் தினம் அவளை சுதாகரே வந்து வீட்டிற்குக் கூட்டிப் போனான்.

"என்ன வேலை ஜாஸ்தியா?" என்ற விசாரிப்புடன் அவளுக்காய் கார் கதவைத் திறந்து விடுவான்.

அவளுக்குள் புது உற்சாகம் குபுகுபுக்கும்.

குழாயை திறந்தது போல லலிதா அன்றைய நிகழ்வுகளை, சவால்களைச் சொல்வாள்.

இன்னின்ன விவரங்களை இந்த முறையில் கம்ப்யூட்டர் ஃபைல் செய்தால் வேலை இலகுவாகும் என்று குறிப்புகள் தருவான்.

"ஆக உங்களுக்குத் தெரியாத விஷயமே கிடையாதா?"

"எல்லாவற்றிலேயும் கொஞ்சம் கொஞ்சம் தெரியும்" என்று எளிதாய் சொல்பவனை பெருமிதத்துடன் பார்த்திருப்பாள்.

"வெளிநாட்டிலே அம்மாவும் அக்காவும் இருக்கறதால கம்ப்யூட்டர் தான் இப்ப எங்களுக்கிடையே பாலம்.. ஏறக்குறைய தினம் அவங்களோட தொடர்பு கொண்டிடுறேன்.. குறிப்பாய் என் அக்காவுடைய குட்டி வாண்டுகளோடு.."

முகம் கனியப் பேசினான்.



ஏறக்குறைய பத்து நாட்கள் கடந்து விட்ட சமயத்தில் தான் அது நேர்ந்தது..!

அன்று இருவரும் வீடு திரும்பிய போது பாட்டி முகத்தில் சுரத்தேயில்லை.

"என்ன.. என்னாச்சு பாட்டிம்மா?"

"விசாலி கீழே விழுந்து காலை உடைச்சுகிட்டாளாம்."

"உங்க போன் சிநேகிதிதான்?"

"கான்வென்ட்ல அவ இந்திய இசையும் தையலும் கற்றுத் தந்தப்ப நானும் அவளும் பல முறை ஒரே அறையில் தங்கியிருந்ததுண்டு.. அவளும் ஒண்டிக்கட்டை.."

"ரெண்டு மாசத்துக்கு முன்னே உங்களைப் பார்க்க வந்தாங்களே?"

"ஆமாம் சுதாகர்... நான் காய்ச்சல்ல கிடந்தேன்னு சொன்னதுமே கிளம்பி வந்துட்டா.. முன்னமே எங்களுக்குள்ளே ஒரு ஒப்பந்தம்."

இருவருக்கும் கெட்டில் தேநீரை வார்த்தபடி மெள்ள பேசினார். "எங்கள்ல ஒருத்தருக்கு உடம்புக்கு முடியாமப் போகும் போது அடுத்தவங்க வந்து ஒத்தாசையாய் இருக்கணும்னு... தவிர ஒரு மாற்றம் தேவைன்னா கூட அடுத்தவர் வீடு இருக்கின்ற தெம்பு உண்டு."

"ஆனா நீங்களும் ரொம்பத் தெம்பாய் இல்லையே பாட்டிம்மா. கோவிலுக்குப் போகக் கூட யோசிக்கறீங்க. இன்னும் ரெண்டு நாளிலே எங்க ஸ்கூல் வேலை பூர்த்தியாயிடும். பிறகு நான் வேணும்னா அவங்க ஒத்தாசைக்குப் போறேன்.. ஆமா அவங்க எங்க இருக்காங்க?"

"சேலத்துக்கும் நாமக்கல்லுக்கும் இடையே ஒரு கிராமம். சொந்த வீடு இருந்ததால அங்க செட்டிலாயிட்டா. தவிர எனக்கும் இந்தக் குளிர்தான் என் மூட்டுகளுக்குக் கேடு. மழையும் சேர்ந்து எலும்பை இறுக்குது... ஆகக் கீழே போனால் என் உடம்பு

இத்தனை மோசமாயிராது தவிர விசாலத்துக்கு ரெண்டு தூரத்து உறவுக்காரங்க அங்கே பக்கத்து வீட்டில இருக்காங்க. மருந்து வாங்கி வர அந்தப் பசங்க உதவுவாங்க.. எல்லாத்தையும் நான் ஒரு ஒழுங்குக்கு கொண்டு வந்துட்டேன்னா மூணாம் நாளே திரும்பிடுவேன்.. தவிர விசாலிக்கும் நான் போனால் தெம்பும் ஆறுதலுமாயிருக்கும்.."

"இங்கே லலிதா இருக்கறதை மறந்துட்டீங்களா டீச்சர்?"

"இது பாதுகாப்பான இடம்.. தவிர உதவிக்கு பக்கத்திலே நீயிருக்கியே சுதாகர்.. ரெண்டு நாள்தானே?"

பாட்டியின் குரல் ஏறக்குறைய கெஞ்சியது.

சுதாகர் கேள்வி பாவனையுடன் லலிதாவை நோக்கினான். சற்று குழம்பினாலும் பேத்திக்கு பாட்டியின் முகவாட்டலைக் காண சகிக்கவில்லை.

"சரி பாட்டிம்மா.. நாளைக்கு விடியவுமே கிளம்பலாம். நானே உங்களைப் போய் அந்த கிராமத்தில் விட்டுட்டு வந்துடறேன்.. பாதி நாள் லீவ் வேணும்னு ஸ்கூல்ல கேட்டுடறேன்.."

போன் பக்கமாய் நகர்ந்தவளைத் தடுத்தது சுதாகரின் குரல்.

"அது அநாவசிய அலைச்சல் லலிதா.. நானே டீச்சரை காரில் கொண்டு போய் விட்டுட்டு, மறுபடி அழைச்சிட்டும் வரேன்.. ஆனா நீ தனியாய்..?"

"என்ன பயம்? ஆனால் உங்களுக்குத்தான் சிரமம்... அதைத் தந்து நப்புன்னு படுது.."

"ப்ளீஸ்.. எந்த ஆளும் இந்த மாதிரி சந்தர்ப்பத்திலே செய்ய வேண்டிய உதவிதானே இது..? நீ இங்கே..?"

"வேலை இருக்கறதால் நாள் ஓடும்.. பாட்டி இல்லாமல் கொஞ்சம் வீடு வெறிச்சென்று இருக்கும்... ஆனால் சமாளிச்சுடுவேன்."



பாட்டியின் முகம் நிம்மதியால் தெளிந்தது.

"தாங்க்ஸ்டா லலி.. அப்ப விசாலிக்கு இப்பவே போன் பண்ணிடறேன் கிளம்பிட்டேன்னு..?"

"இப்பவே கிளம்பறதா?"

"மணி நாலரை தானே ஆகுது? சுதாகர் என்னை நாமக்கல் போற பஸ்ஸில் ஏற்றிவிட்டால் இருட்டறதுக்குள்ளே போய் சேர்ந்திடுவேன்."

"ஏதோ ஏ.பி.டி.யில் பார்சலை அனுப்பற மாதிரி பேசறீங்க? அவங்க கிராமம் கொஞ்சம் உள்ளடங்கி இருக்கிறதாய் அந்தம்மா சொன்ன ஞாபகம்.."

"ஆமாம்ப்பா ஆனா.."

"பஸ் மெயின் ரோட்டில இறக்கி விட்டிரும். அங்கே ஆட்டோ, டாக்ஸி நிற்காது நோ... நானே வந்து இறக்கி விடறேன்.."

மேலும் சில நிமிட வாக்குவாதத்திற்குப் பின் பயண விஷயம் முடிவானது.

ஐந்து மணிக்கெல்லாம் பாட்டியுடன் சுதாகர் கிளம்பி விட, அவர்களுக்கு கையாட்டிவிட்டு வீடு நுழைந்தாள் லலிதா.

ஞாபகமாய் வீட்டின் முன், பின்புறக் கதவுகளைத் தாழிட்டாள்.

வானம் முழுக்க இருட்டிக் கிடந்தது.

காற்று மகாக் குளிருடன் வீசியது.

இரண்டு நாட்களுக்கு முன் சாக்கடையிலிருந்து மீட்டு இங்கு அனுப்பப்பட்ட இரண்டு குட்டிப் பூனைகளுக்கு தட்டில் பாலை ஊற்றி வைத்தவள் வீட்டை ஒதுக்கலானாள்.

வீட்டின் அமைதி ஒரு நிறுசாய் அவஸ்தைப்படுத்தியது.

அந்நேரம் அமைதியைக் கீறிக் கொண்டு அலறியது தொலைபேசி.

## 10

"ஹலோ?"

"சுதாகரோட பேசணுமே. அங்க இருக்காரா?"

அலட்டலான ஆங்கிலத்தில் விசாரித்தது ஒரு பெண் குரல்!

"இல்ல.. அவர் வெளியே.. வெளியூர் போயிருக்கிறார்.. நீங்க?"

"வெளியூருக்கா? எங்கிட்ட சொல்லலியே?"

"நீங்க?"

"ஷாலினி. நீ லலிதா தானே? போன வாரம் எங்க பங்களாவிற்கு டீக்கு வந்திருந்த பொண்ணுதானே?"

"ஆமா பாட்டிம்மா திடீர்னு கீழே போக நேர்ந்தது. அழைச்சுட்டு போயிருக்கிறார்."

"உடம்புக்கு ஏதேனுமா?"

"பாட்டியோட சிநேகிதிக்குக் கால் உடைஞ்சிருச்சு."

"அப்ப டீச்சரை டிராப் பண்ணிட்டு உடனே திரும்பிடு வார்தானே?"

"ம்ம். வந்ததும் உங்களுக்கு போன் பண்ணச் சொல்லவா?" மனமின்றி கேட்டாள் லலிதா.

"வேண்டாம். அசதியாய் இருக்கும். நாளை நானே வந்து அவரைப் பார்க்கறேன்.. ரொம்பப் பிரியமாய் அழைச்சார்.. அதான்."

"சரி."

லலிதாவிற்கு எரிச்சலாய் இருந்தது.



பிரியமாய் அழைத்தாராமே?

தன்னை இப்படி வருந்தி அழைத்ததில்லையே?

தானாய் தானே.

'உங்க தாத்தா எடுத்த புகைப்படங்களைக் காட்டுங்க' என்று அவன் பின்னே ஓட நேர்ந்தது.

சற்று கசப்புடனேயே சில நாட்களுக்கு முன்பு மேஜரின் வீட்டிற்கு தேநீர் விருந்துக்காக போனதை நினைவு கூர்ந்தாள்.

அன்று..

மேஜர் பாட்டிம்மாவுடன் பல பழங்கதைகளைப் பேச, இந்த ஷாலினிப் பெண் சுதாகரை அட்டைப் பூச்சியாய் அப்பிக் கொண்டாள்.

கரும்பச்சையில் இலைகளை ஃபோட்டோ பிரிண்ட் செய்திருந்த மெல்லிய ஜார்ஜெட் அவள் மிகக் கச்சிதமாய் தன் உடலைக் காப்பாற்றுகிறவள் என்பதைக் காட்ட, நிமிடத்திற்கு நாலு சிரிப்பு என்று வாய் ஓயாமல் பேசினாள்.

ஆக லலிதா தான் அங்குமில்லாமல் இங்குமில்லாமல் அல்லாடினாள்.

"நான் உங்க தோட்டத்தைப் பார்க்கலாமா?" என்ற முனகலுடன் வெளியே நழுவ, சுதாகரும் பின்னே வர, சங்கிலித் தொடராய் அவளைத் தொடர்ந்தாள் ஷாலினி.

"இங்கே எனக்கெப்படி பொழுது போகும் மேஜர் அங்கிள்னு சலிச்சுட்டேதான் வந்தேன். வந்த முதல் நாளே உங்களைச் சந்திச்சதில் சந்தோஷம் சுதாகர். உங்க தாத்தாவைப் பத்தி புத்தகமே எழுதறீங்களாமே.. கிரேட்.. நீங்க ரொம்ப வெல் நோன் ஃபேமிலின்னு அங்கிள் சொன்னாங்க.. அந்தப் பெருமையை எல்லாம் கண்டிப்பாய் நீங்க எழுதணும்."

மூச்சு விடாமல் லொடலொடத்தாள்.

பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவனாமே?

அதனால் தான் அன்று மேஜர் அத்தனை சகஜமாய் பேசி இன்று தங்களையும் வீட்டிற்கு அழைத்திருக்கிறாரோ?

பூக்களை, புல்லை ரசிப்பது போல இம்மாதிரி சிந்தனைகளுடன் ஒதுங்கியே நின்றாள் லலிதா.

ஆனாலும் ஓரக்கண்ணால் மற்ற இருவரையும் பார்க்க பார்க்க அவளுக்குள் ஏதேதோ சுழிகள், குமிழ்கள், அலைகள்...

இத்தனை அழகும் அந்தஸ்துமுள்ள பெண்ணை ஈர்க்கக் கூடியவன் தானே சுதாகர்? நான்தான் மந்த புத்தியுடன் அவனை மட்டமாய் நினைத்திருக்கிறோம்.

புடவைக் கடையில் தன் முன் சேலை விழும் போது தெரியாத அதன் அழகு, மற்றொருத்தி அதைத் தூக்கி நீவும் போது புரிவது போலத்தானோ?

சுதாகரும் ஷாலினிக்குச் சளைக்காமல் சிரித்து சிரித்து ஈடு தருகிறான்.

கடுப்புடன் வீட்டிற்குள் போனவள் பாட்டியை சீக்கிரமாய் கிளப்பி விட்டாள்.

இப்போது ஷாலினி பேசுவதைப் பார்த்தால் இடையிடையே அவள் சுதாகரைச் சந்தித்திருக்கிறாள். பழகியிருக்கிறார்கள். அவள் அவனை வருந்தி 'பிரியமாய்' தன் வீட்டிற்கு அழைக்குமளவிற்கு.

இரண்டு துண்டு ரொட்டிகளை வாட்டி ஒரு கோப்பைப் பாலுடன் சாப்பிட்டவள், இலக்கின்றி தொலைக்காட்சி பெட்டியின் முன் அமர்ந்து சானல்களைப் புரட்டினாள். தனியே பார்ப்பதில் எதுவும் கவைக்கவில்லை.

சுதாகரோடு பார்த்தால் இடையிடையே 'நச்' சென்ற கமெண்ட் குசி சேர்க்கும். அன்று உள்ளாட்சி தேர்தல் முடிவுகளைப் பார்த்து கொண்டிருந்தனர். எண்ணுவதில் குளறுபடி என்று கட்சிகள் ஒன்றை மற்றொன்று சாட...

'ஜனநாயகத்தின் பெருமை



வாக்கெடுப்பில் இல்லை

எண்ணுவதில் இருக்கிறது'

என்று அயல் நாட்டுக்காரர் சொன்னதை மேற்கோளாய் காட்டினான். தன் காதுகள் அவனுடைய கார் சத்தத்திற்காய் ஹார்ன் ஒலிக்காய் விடைத்திருப்பது அவளுக்குப் புரிந்தது. ஷாலினியைப் போல தானும் அவனை ஒட்டி ஈஷ முயலுகிறோமோ என்ற குற்றக் குறுகுறுப்பு...

இல்லையே...

அவரே தானே முன் வந்து தானே என்னைத் தினம் பள்ளிக்குக் கூட்டிப் போகிறார், வருகிறார். என்னைப் பார்க்கையில் அவர் முகத்தில் ஒரு தனி மகிழ்வு விரியவில்லை? அந்த மகிழ்வு வெளிச்சம் பார்த்ததும் தனக்குள்ளும் ஒரு வெதுவெதுப்பான குதூகலம்... அந்த மகிழ்ச்சி தன் கண்களிலும் தெரியுமோ?

கூச்சத்துடன் யோசித்தவளை சன்னக் குரல்கள் இழுத்தன.

"மியாவ்... மியாவ்..."

சாம்பலும் வெள்ளையும் பிசிறிய பஞ்சு உருண்டைகளான பூனைக்குட்டிகள் தங்கள் மரப்பெட்டியை விட்டுத் தட்டுத் தடுமாறி வெளியே குதித்திருந்தன.

ஒன்றின் மேல் மற்றொன்று விழுந்து உருண்டு, வீட்டை முகர்ந்தபடி அலைய ஆரம்பித்தன.

"நாட்டி கிட்டீஸ்... இப்பத்தான் பால் வச்சேன்... அதுக்குள்ளேயா பசிக்குது?"

கொஞ்சலாய் ஒன்றை தூக்கினாள்.

அதற்குள் மற்றொன்று அதன் சேவை என்ன என்பதை காட்டி விட்டது.

"அச்சச்சோ... இப்படி தரையை ஈரம் பண்றதுக்கா இறங்கினே?"

செவ்வமாய் சேமித்தாள்.

முதல் நாள் பூனைக்குட்டி ஈரம் பண்ணிய போது சுதாகர் பழைய செய்தித்தாளை ஈரத்தில் பரப்பியது நினைவிற்கு வர, அவசரமாய் தாளுக்காய் தேடினாள்.

முதலில் தாளை ஊறவிட்டு விட்டு பின் தரையை டெட்டால் தெளித்து துடைக்கவும் வேணும். இல்லையெனில் ஜன்னல்கள் பெரும்பாலும் மூடியிருக்கும் இந்த ஊரில் வீடு வாடையடித்து விடும்.

வழக்கமாய் பழைய செய்தித்தாள்கள் அடுக்கப்படும் இடத்தைக் குனிந்து பார்த்தாள்.

காலியாக இருந்தது.

நாற்றத்தை விட ஈரத்தில் கால் வழுக்கி விட்டால் ஆபத்தே என்று மேலும் மும்முரமாய் தேடினாள்.

அன்றைய செய்தித்தாளைத் தவிர மற்றவை கண்களில் படவில்லை.

சமையலறையின் மர பீரோ ஒன்றில் காகிதக் கட்டுக்களைப் பார்த்த ஞாபகம் வர அதைத் திறந்து கைக்கு கிடைத்ததை உருவியவள், அதை பூனைக்குட்டி உருவாக்கிய அசிங்க ஈரத்திட்டின் மீது பரப்பினாள். செய்தித்தாளுடன் வரும் இணைப்புப் புத்தகம் அது.

அச்சிட்ட காகிதம் மெள்ள மெள்ள ஈரத்தை உறிஞ்சுவதை இலக்கின்றி பார்த்தவளின் பார்வை உன்னிப்பானது.

சற்றும் பழுப்பேறிய தாளிலிருந்த படத்தைக் குனிந்து நோக்கினாள்.

முழங்காலிட்டு மேலும் குனிந்து படத்தின் கீழே எழுதியிருந்ததை வாசித்தாள்.

ஈரம் படிந்து கசப்பதை பொருட்படுத்தாமல் புத்தகத்தை எடுத்தவள் விளக்கின் அடியில் போய் நின்று மீண்டும் மீண்டும் வாசித்தாள்.

புத்தகத்தின் அட்டையைப் புரட்டிப் பார்த்தாள்.



அது தந்தை-மகன் சிறப்பிதழ்!

திரைப்பட தொழிலில், விளையாட்டில், வியாபாரத்தில் பிரபலமான தந்தை மகன்களை பேட்டி எடுத்து செய்தியாக்கி யிருந்தது பத்திரிகை-இரண்டு ஆண்டுகளுக்கு முந்தைய தேதியிலிருந்தது. அந்தப் படத்தில் இளநகையுடன் இருந்தது சுதாகர்தான். அதை ஆனந்தமாய் இவள் பார்த்து ரசிக்கக் கூடாத வகையில், சுதாகருடன் நின்றது அவன் தந்தை வினி சாலமென்.

அது லேசில் மறக்கக் கூடிய பெயரில்லையே. தினம் தினம் தன் தாய் துவேஷத்துடன் உச்சரிக்கக் கேட்ட பெயரல்லவா?

'உன் அப்பாவின் பிஸினஸ் நொடிந்து அவர் சாவிற்குக் காரணமானவன் இவன்தான்' என்று தாய் சொல்லி சொல்லி தன்னுள்ளும் உருவேறியிருந்த வெறுப்பு.

அந்த வெறுப்புக்குரிய பெயர். ஆனால் உலகத்தில் ஒரே ஒரு வினி சாலமென்தானா? மனதுக்குள், கடவுளே இது அவனாய் இருக்கவே கூடாது என்ற அவசர வேண்டலுடன் மேலும் தகவல்களை வாசிக்கலானாள். மெட்டல் கம்பெனி முதலாளி. திருச்சி, சென்னையில் தொழிற்சாலைகள். வெகு எளிய ஆரம்பம். பின் அசுரத்தனமான உழைப்பு. விளைவாக வெற்றி. சாதனைகள்.

இது அவன்தான்...!

தன் வெறித்தனமான முனைப்பில் தன் தந்தையை அடித்து சாய்த்த சாலமெனேதான். அவனுடைய மகனா சுதாகர்? அவனுடனா தான் பாகு கண்ட எறும்பு போல நெருங்கி மகிழ்ந்தோம்? ஏன் இந்த உண்மையை தன்னிடம் யாரும் சொல்லவில்லை? பாட்டிக்கு இந்த விவரம் தெரியுமா? இப்பழைய பத்திரிகை இங்கு பத்திரப்படுத்தி வைக்கப்பட்டதா அல்லது தற்செயலாய் தன் கைக்குள் சிக்கியதா? யோசனைகளில் அல்லாடினாள்.

குழப்பத்தில் தலை கனத்தது. சற்று முன் எப்போது வருவான் என்று ஆவலாயிருந்த மனம் இப்போது சுதாகர் வந்து விடுவானோ என்று அஞ்சியது.

அவளைப் பார்த்து இயல்பாய் பேசக்கூடிய அல்லது எதையும் கேட்கக்கூடிய மனநிலை நிச்சயமாய் இல்லை. அவசரமாய் விளக்குகளை அணைத்தாள்.

மணி இன்னும் எட்டு கூட ஆகவில்லை. ஆனால் சுதாகர் திரும்பியதும் பாட்டியை இறக்கி விட்டது பற்றி ஏதேனும் சொல்ல வருவான். பயண அலுப்புடன் இருப்பவன் தேநீரை அல்லது இரவு உணவைக் கூட எதிர்பார்க்கக் கூடும். ஆனால் தன்னை அவன் இப்படி ஏமாற்றக் கூடும் என்றும் அவன் எதிர்பார்க்கவே இல்லையே?

தன் கட்டிலில் அமர்ந்து யோசித்தவளுக்கு பாட்டிக்கும் சுதாகரின் பூர்வீகம் தெரிந்திருக்கும் என்றே பட்டது. அவனுக்கும் தங்கள் தகப்பனார்களிடையே நடந்த போட்டி போராட்டம் தன் தகப்பனின் வெற்றி. அதனால் லலிதாவின் அப்பாவிற்குக் கிடைத்த தோல்வி. மரணம் வரை இழுத்துச் சென்ற அவமானத் தோல்வி எல்லாம் தெரிந்திருக்கும்.

அதனால்தான் தனக்கும் தன் அப்பாவிற்கும் இடையே நல்லுறவு இல்லை என்பதாய் காட்டிக் கொண்டானோ? அன்றொரு நாள் சுதாகர் பேசிய தத்துவம் கூட தன்னை சரிக்கட்டத்தானோ? 'வாழ்க்கையின் எதிர்ப்புகள் நம்மைக் கோழை ஆக்கக்கூடாது லலிதா. சவால்கள் நமக்கு முன்னேற்றப்படிகள். யாருக்குத்தான் எதிரி இல்லை? மண் புழு முதற்கொண்டு மகா திமிங்கலம் வரை ஒவ்வொன்றுக்கும் எதிரிகள் உண்டு. மானுக்குப் புலி பகைன்னா அந்தப் புலிக்கு வேடன் பகை. நாமதான் நம்பிக்கையும் நேர்மையுமாய் போராடணும்.'

அவளும் அன்று அதை உற்சாகமாய்த்தான் ஆமோதித்தாள். ஆனால், தன் தந்தை கோழையாய் தற்கொலை செய்து கொண்டதை குத்திக் காட்டத்தானோ அந்தப் பேச்சு?

அப்படியே சுதாகருக்கு அவன் அப்பாவுடன் இணக்கம் இல்லை என்பது நிஜம் என்றாலும் அவன் சாவேரியின் மகன் என்பதும் நிஜம்தானே?



மாறாத மறையாத உறவல்லவா அது?

அப்படியிருக்க சுதாகருடன் தனக்கு எந்த நெருக்கமும் சாத்தியமில்லை. ஆங்காரத்துடன் முடிவு எடுத்தவளுக்கு அடக்க முடியாமல் கண்ணீர் பெருகி வழிந்தது. தன்னை ஏமாற்றி விட்டார்களே என்ற வலி. பெரும்பாலான தமிழ் சினிமாக்களைப் போல குடும்ப எதிரியின் மகனையே விரும்ப ஆரம்பித்திருந்த தன் முட்டாள்தனம். இனி இந்தச் சிக்கலிலிருந்து எப்படி விடுபட என்ற ஆற்றாமை... எல்லாம் சேர, போராடினாள். போராடிக் களைத்தவள் இரவு சுதாகரின் கார் வந்த சத்தம் கேட்ட போதும் கட்டையாய் கிடந்தாள். போன் விடாமல் அலறியபோதும் அவள் அதைத் தொடவே இல்லை.

## 11

காலையில் இயந்திரமாய் வேலைகளைச் செய்தவள் எப்படி சுதாகரைத் தவிர்த்து கான்வென்ட்டிற்குப் போவது என்று சிந்தித்தாள். அவனைப் பார்க்கவே விருப்பமில்லை. அவன் உதவியை ஏற்பது இனி இழுக்கு. வெறுப்பில் அவனை கண்டபடி பேசி விடுவதைத் தவிர்க்கவும் நினைத்தாள். போன் மணி அழைத்தது.

"ஹலோ..." அழைத்தது பாட்டிதான்.

"லலிம்மா... நேற்று ராத்திரி கூப்பிட்டேனே? ஏன் எடுக்கலை. நல்லாயிருக்கியா?" ஆழ மூச்செடுத்தவள் மெள்ள பதில் சொன்னாள். "எதிர்பாராத ஒரு அதிர்ச்சி பாட்டிம்மா... அதான் சீக்கிரம் படுத்திட்டேன்."

"என்னடா... என்னாச்சு?"

"பதறாதீங்க பாட்டிம்மா... உங்களுக்கு ஏற்கனவே தெரிஞ்ச விஷயம்தான். ஆனா எனக்கு நேற்றுதான் தெரிய வந்தது. அதை எங்கிட்டேருந்து நீங்க மறைச்சது அடுத்த அதிர்ச்சி.

எல்லாம் சேர்ந்து தாங்க முடியலை." குரல் தழுதழுத்து உடைந்தது.

"என்னடா லலி? சுதாகரைப் பற்றியா சொல்றே?"

"ஆமா... ஏம் பாட்டிம்மா மறைச்சீங்க?"

"வேணும்னு மறைக்கலைடா. சுதாகர் நம்ப அவுட் ஹவுஸை கேட்டு வந்தப்ப எங்களுக்குப் பரம்பரம் குடும்பங்களைப் பற்றித் தெரியாது. அவன் தான் ஒரு பெரிய பிஸினஸ் புள்ளின்னே காட்டிக்க விரும்பலை. அப்பா இறந்துட்டதாயும் அம்மா வெளிநாட்டுக்குப் போயிருக்கறதையும் சொன்னான். தன் தாத்தாவைப் பற்றி நிறைய பேசுவான். ஆனா அன்னைக்கு மேஜர் வீட்டுக்குப் போனான் பாரு."

"செக்... கின்னிக்கோழியை கூட்டிட்டு வர?"

"ம்ம்... அன்னைக்கு மேஜர் அத்தனை சகஜமாய் அவனிடம் பேசி நம்மையும் வீட்டுக்கு அழைச்சார்னதும் எனக்கு சந்தேகம் தட்டுச்சு. இவன் பெரிய ஆளாயிருக்கறதால் தான் மனுஷர் குனிஞ்சுட்டார்ன்ற சந்தேகம்... முன்னே வாசிச்சு இருக்கட்டுமேன்னு வச்சிருந்த அந்தப் பத்திரிகையைத் தேடி எடுத்துப் பார்த்தேன். மறுபடி பார்த்ததும் படத்தில் இருந்தது சுதாகர்னு நிச்சயமானதும் அவனிடம் பேசினேன். அவனுக்கும் தான் பாதிக்கப்பட்ட தர்மராஜின் குடும்பத்தைச் சேர்ந்தவன்னு ஏதில் சங்கடம். நீ அவர் மகள்ன்னதும் அதிர்ச்சி தான். ஆனா நாந்தான் அதெல்லாம் பழங்கதைப்பா மறக்க வேண்டிய விஷயம்ன்னேன். அதில் நாங்க தெளிஞ்சிட்டோம்."

"அதே போல என் என்னிடம் சொல்லலை பாட்டிம்மா. நான் ஒன்னும் சின்னக் குழந்தையில்லையே?"

"உனக்குப் பெரிய பக்குவமுமில்லையேடா லலி. வந்த மறுநாள் டிவியில் மன்னிப்பு பற்றிய செய்தியைக் கேட்டவள் இதெல்லாம் கேட்க சரி ஆனா கடைபிடிக்கக் கூடாதுன்னே [illegible] உன்னிடம் [illegible] முறைத்தவழி நடந்தது வேற [illegible] அந்நிலை தொடருமோன்னு



அஞ்சினேன். எனக்குத் தெரிஞ்ச பிறகும் பிறகு சொல்லலாம்னு ஒத்திப் போட்டேன்."

"ஆனா அவர்... சுதாகர் என்னிடம் சொல்லியிருக்கலாம்."

"இப்பதான் இயல்பாய் பழகறீங்க. உம்மனசு கனிஞ்சதும் சரியான சந்தர்ப்பத்தில் சொல்லியிருப்பான். அதற்குள்..."

சுதாகர் தன்னிடம் எதையோ சொல்லத் தவிப்பது போன்ற பிரமை லலிதாவிற்கு சில சமயங்களில் தோன்றியதுண்டு. ஆக அது பிரமை அல்ல உண்மைதான் போலும்.

ஆனால் அப்படியே அவனும் 'என் அப்பாவின் துரோகத்தால்தான் உன் அப்பா தொழிலிலும் வாழ்விலும் தோற்றார். மன்னித்து விடு' என்று விட்டால் மட்டும் நிலைமை மாறி விடுமா என்ன? துணிச்சலாய் உண்மையைச் சொன்னான் என்பதைத் தவிர வேறென்ன மாற்றம்?

"உங்களை இங்கே சந்திக்க, பழக வைத்தது கடவுளுடைய சித்தம் லலி. முழுசாய் மன்னிக்க உனக்கு கிடைச்சிருக்கற சந்தர்ப்பம். நாம சக மனுஷனை மன்னிக்கும் வரை ஆண்டவர் நம் பாவங்களை மன்னிப்பார்னு எதிர்பார்க்க முடியாதே? தவிர போன தலைமுறையின் தவறுகளை அதன் கசப்பை நீங்க சுமக்க வேண்டிய அவசியமில்லை."

"பிதாக்கள் திராட்சைப் பழங்களைச் சாப்பிட்டார்கள்-பிள்ளைகளின் பற்கள் கூசிப் போயினங்கறது இனி கிடையாதுன்னு கடவுளே சொல்றாரே?"

"பிரசங்கம் போதும் பாட்டிமா. நீங்க சீக்கிரம் ஏற்காடு வந்து சேருங்க. நீங்க வீடு வந்ததும் நான் கிளம்பணும்."

ஏதோ பேச நினைத்த முதியவள், "ஆகட்டும்டா" என்ற பெருமூச்சுடன் தொடர்பைத் துண்டித்தாள்.

பாட்டியின் டைரியிலிருந்து கண்ணனின் ஆட்டோ எண்ணைத் தேடி எடுத்தவள், ஆட்டோவை எட்டரைக்கு வரச் சொன்னாள். சுதாகரன் அவளை அழைத்துப் போக 8.45-க்கு

வரும் போது வீடு பூட்டிக் கிடக்க வேணும். அவசரமாய் மீதி வேலைகளில் மூழ்கினாள்.

ஆனால் தப்பிப்பது போல ஆட்டோவில் ஏறி பள்ளி போய் சேர்ந்த பிறகு மனசு அலை பாய்ந்தது. தான் ஏன் இப்படி பயந்து ஓட வேணும் என்ற அங்கலாய்ப்பு. ஒவ்வொரு முறை தொலை பேசி மணி சிணுங்கும் போதும், சுதாகரின் அழைப்போ? என்ற படபடப்பு. அழைப்பு அவனுடையது அல்ல என்றானதும் வேறு விதமான தவிப்பு. தலைமை ஆசிரியை பக்கத்தில் வந்து கனிவாய் விசாரித்தார்கள்.

"என்ன மிஸ் லலிதா... பாட்டி ஊருக்குப் போனது உங்களைப் பாதிச்சிருக்குது போல?"

"ஏன்... அதெல்லாம் இல்லை சிஸ்டர்."

"இந்த ரெண்டு பில்கம் சரியில்லை. சில செலவுகள் விடுபட்டிருக்குது."

"ஸாரி சிஸ்டர் மறுபடி செய்துடறேன்."

வேலை தப்பும் தவறுமாய் நடந்ததால் அன்றைய வேலையை முடிக்கும் போது மணி நான்காகி இருந்தது. மாலை மூணரைக்கு கண்ணனை வரச் சொல்லியிருந்தாலும் சுதாகரும் வந்து விடுவானோ என்ற பரிதவிப்பு.

அவசரமாய் வெளியே வந்தாள். மூச்சு இழுத்துப் பிடித்தாள். வழக்கமான இடத்தில் சுதாகரின் கார் நின்றது. இவளைக் கண்டதும் வழக்கம் போல உள்ளே அமர்ந்தபடியே கார் கதவைத் திறந்து விட்டான். ஆனால் முகத்தில் வழக்கமான மலர்ச்சியில்லை.

அருகே போய் நின்று "வேணாம் நான் ஆட்டோவை வரச் சொல்லியிருக்கேன்" என்றாள் சற்று விறைப்பாக.

"நான் கண்ணனை திருப்பி அனுப்பிட்டேன்."

"ஏன்? அவன் எப்படி போனான்?"

"வந்து போகவேதான், காலை எனக்குப் பயண [illegible] நீ ஆட்டோவில் வந்திருக்கலாம். நேரா [illegible] ஏறு லலிதா..."



பள்ளி வளாகத்திற்குள் சச்சரவு செய்ய விரும்பாமல் காரினுள் ஏறினாள். கார் வழக்கமான பாதையில் ஊர்ந்தது.

"என்னாச்சு கோபமா?"

சிறு குழந்தையை விசாரிப்பது போல தன்னை அவன் கேட்டது அவளின் கோபத்தை விசிறி விட்டது.

"உண்மை தெரிஞ்சிட்டது. உண்மையை இத்தனை நாள் மறைச்சீங்கன்ற கோபம்."

அவன் முகம் சற்று வெளிறியது.

"யு மீன்?"

"உங்கப்பா யார்னு தெரிஞ்சுகிட்டேன்."

"யார் சொன்னா?"

"நீங்க சொல்லியிருக்க வேண்டியதைப் பத்திரிகை மூலமாய் தெரிஞ்சுகிட்டேன். எப்படி தெரிஞ்சாலும் உண்மை அதுதானே?"

"ம்ம்." மெள்ளத் தலையாட்டினான்.

"ஏன் என்னிடம் சொல்லலை?"

"ஆரம்பத்திலே உனக்கு என்னைப் பிடிக்கலை. ஒரு விதமான பயம் கூட இருந்ததாய் தோணுச்சு. மேலும் மிரட்ட வேண்டாமேன்னு..."

ஆழ மூச்செடுத்தவன் வார்த்தைகளுக்காய் தவித்தான்.

"அது ஆரம்பத்தில். ஆனா நாம் பேசிப் பழகி நெருங்கிய பிறகு சொல்லியிருக்கலாமே?" அவன் சற்று யோசித்தே பேசினான்.

"சொல்லியிருக்கலாம். ஆனா மனசில்லை. ரொம்ப காலம் கழித்து நான் சந்தோஷமாய் இருக்கேன் லலிதா. உன்னிடம் சகஜமாய் பேசற பொழுது எனக்கு ரொம்பப் பிடிச்சிருந்தது. அதைக் கலைக்க, கெடுக்க விரும்பலை. இன்னும் கொஞ்சம் [illegible]"

"முழுசாய் மறைக்க நினைச்சீங்க." குரோதத்துடன் குற்றம் சாட்டினாள்.

அவன் சாந்தமாய் தலையசைத்தான்.

"அது முடியாதே. எவ்வளவு நாள் மறைக்க முடியும்? நம்ம கம்பெனி பத்திரிகை எங்கப்பா பேர் இல்லாம தயாராகுமா? ஆக எப்படியும் உனக்கு தெரிய வேண்டிய விஷயம்தான். என் தப்பு அதை இவ்வளவு நாட்கள் தள்ளிப் போட்டது மட்டும்தான்." என்றவனை வெறித்து போய் பார்த்திருந்தாள்.

## 12

மின்னல்கள் வானை கிழிக்க பொத்துக் கொண்டு ஊற்றியது மழை. நேற்றிரவு ஆரம்பித்தது இன்னும் பெய்வேன் என்று அடமாய் தொடர்ந்து கொண்டிருந்தது.

'நீ இரு நான் போறேன்' என்று முறுக்கிக் கொண்டது போல மின்சாரம் போய் விட நேற்றிரவு மெழுகுவர்த்திகளை ஏற்றி வைத்து வேலைகளை முடித்திருந்தாள். இப்போது மழையைப் பார்ப்பதைத் தவிர வேறு வேலையில்லை. அன்றாட வாழ்வில் மிகப் பழகி விட்ட டிவியின் இரைச்சல் இல்லாத வீடு அமானுஷ்ய அமைதியுடன் இருந்தது. தன் நிழலே பூதம் போல வீட்டில் அலைவதை விசித்திரமாய் பார்த்திருக்க வேண்டிய நிலைமை.

பிராணிகள் எல்லாம் மழையின் ஜில்லிப்பில் அடங்கி சுருண்டு விட்டன. வாசிக்கவோ, வேலைகளைச் செய்யவோ முடியாத அரை இருட்டில் ஒரு வழியாக ஒரு இரவைக் கழித்தாயிற்று.

காலையிலும் மழை அதே உற்சாகத்துடன் வீட்டுக் கூரையில் தாளமிட்டுக் கொண்டிருக்க கான்வெண்ட்டிற்கு போன் செய்தாள்.



"வேண்டாம்மா. இந்த மழையில் நீ வர முடியாது. அப்படிப் பட்ட அவசியமுமில்லை. டே-ஸ்கலார் மாணவிகளை வர வேண்டாம்னு சொல்லிட்டோம்." என்று பள்ளி சொல்லி விட குளிரும் மோடமுமான அந்த நாளை எப்படி கழிப்பது என்ற கவலையுடன் உட்கார்ந்திருந்தாள்.

பிராணிகளுக்கு மட்டுமே சமைக்க தனக்கு இன்றும் வாட்டிய ரொட்டியும் பாலுமே போதும் என்று முடிவு செய்தாள். அடை மழை காரணமாய் நல்லப்பன் பாலை கொண்டு வரவில்லை. அமுல்யாவைக் கரைத்துச் சமாளித்தாலும் பூனைக்குட்டிகள் முகம் சுளித்தன.

அதை அரைச் சிரிப்புடன் பார்த்தபடி சாப்பிட்டவளுக்கு அமைதி எப்படியோ அசவுகர்யமாய் பட பாட்டியின் பாட்டரியில் இயங்கும் டிரான்ஸிஸ்டர் ரேடியோவை உயிர்ப்பித்தாள்.

'மன்னிக்க வேண்டுகிறேன்-உந்தன்
ஆசையைத் தூண்டுகிறேன்-என்னை
சிந்திக்க வேண்டுகிறேன்-கண்கள்
சந்திக்க ஏங்குகிறேன்-உன்
மன்னிக்க வேண்டுகிறேன்?'

பாடலை சுசீலா ஏக்கமும் தாபமுமாய் இழைக்க, இவளுக்குள்ளே இதய நரம்புகள் தாறுமாறாய் இழுபட்டன.

கிறிஸ்தவ நிகழ்ச்சிகள்தான் மன்னிப்பு பற்றியே பேசுகின்றன என்றால் சினிமாப் பாட்டுமல்லவா சேர்ந்து சதி செய்கிறது?

புத்தியை மீறி மனம் கதாகரை நாடுவது புரிய சாப்பிட மனமின்றி எழுந்தாள்.

மாடியேறி ஜன்னல் வழியே அவனது இருப்பிடத்தை அரைக் கண்ணால் நோட்டமிட்டாள். அவனும் இதே தவிப்புடன் மறுகுகிறானா?

அப்படியே நகர்ந்த அவள் பார்வை வீட்டின் பின்புறம் இருந்த நாயின் அறைகளில் நிலைத்தது. பெரிய மண் சரிவையே ஒரு புறமாக்கி மற்ற மூன்று பக்கங்களிலும் செங்கல் சிமெண்ட் கொண்டு எழுப்பிய சிறு அறைகளில் நாய்கள் ஒதுங்கியிருந்தன. வழக்கமாய் வெளியே ஆடும் அவை இன்று மழைக்கு அந்த அறைகளில் புகுந்திருந்தாலும் அறைக் கதவை இழுத்துச் சாத்திக் கொள்ளும் ஆற்றலை இறைவன் அவற்றுக்கு அளிக்கவில்லையே. ஆதத் தகரக் கதவுகள் இரண்டும் திறந்தே கிடக்க அதன் வழியே மழை நீர் உள்ளே விசிறியடிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

அவசரமாய் படிகளில் இறங்கியவள் குடையுடன் வெளியேப் போய் கதவுகளை இழுத்து மூடினாள். இரும்பு கொண்டியால் தாழிட்டாள். பூனைக்குட்டிகள் இவளைத் தொடர்ந்து பூப்பந்து போல தத்தக்கா பித்தக்கா என்று ஓடி வந்து வாசல் விளிம்பில் நிற்பதைப் பார்த்தவள், அவை மழை நீரில் விழுந்து விடுமோ என்ற அச்சத்துடன் வீட்டை நோக்கி ஓட அந்த விபரீதம் நேர்ந்தது.

மழையில் சாய்ந்து கிடந்த வேலிக் கம்பம் ஒடிய அவள் காலை இடறியது தடுமாறினாள். அதன் முடிச்சிட்ட இரும்புக் கம்பி அவள் பாதத்தைக் கீறி கிழித்தது. குப்புற விழுந்தவளின் நெற்றி சிறு கூரான கல்லில் மோத நினைவு இழந்த வனிதா அப்படியே மழை நீரில் கிடந்தாள். ரத்தம் தாராளமாய் வெளியேற அவள் உடல் குளிர ஆரம்பித்தது. உள்ளே அடைபட்டிருந்த நாய்கள் எம்பி எம்பிக் குரைத்தன.

அவள் கண் விழித்ததும் நடந்த அசம்பாவிதம் நன்றாகவே நினைவிற்கு வந்தது. தான் படுத்திருந்த மிருதுவான உயர்ந்த படுக்கையை நன்றியுடன் உணர்ந்தாள். கரி அடுப்பின் வெதுவெதுப்பு அறையைக் கம்பளியாய் சுற்றியிருந்தது.

மெல்ல உடலின் பாகங்களை அசைக்க முயல, நெற்றியிலும் பாதத்திலும் விசேஷவலி இருப்பது புரிந்தது. அறையின் வெளியே பேச்சுக் குரல்கள் கேட்டன.



"நல்லவேளை தொலைபேசி இணைப்புகள்ல பாதிப்பில்லை டாக்டர். இல்லைன்னா வனிதாவை ஈரத்தோட வீட்டுலே போட்டுட்டு உங்களைத் தேடி ஓடி வந்திருக்கணும். ரத்தத்தில அவ ஜில்லுன்னு கிடக்கவும் ரொம்பப் பயந்துட்டேன்."

அருகே சுதாகரும் இல்லையெனில் தான் அப்படியே கிடந்து இறந்திருக்கக் கூடும் என்பது உறைக்க அவள் உடம்பு சிலிர்த்தது.

"அப்பத்தான் ஒரு பிரசவ கேஸ்க்காக கிளம்பிட்டிருந்தோம். உங்க போன் வந்ததால் போற வழியில் முதல்ல இங்க வந்தோம். இனி பயமில்லை."

"கடவுளுக்கும் நன்றி சொல்லணும்."

"சுதாகர்" மெள்ள குரல் கொடுத்தாள்.

முதன் முறையில் அவனைப் பேர் சொல்லி அழைப்பது அந்நிலையிலும் புரிய முகம் சூடேறியது. உள்ளே மூவர் நுழைந்தனர். அவன் முகம் அவளை ஆவலும் பரிவுமாய் குனிந்து பார்வையால் நீவியது.

டாக்டர் பெரும் குரலில் கிண்டலாக- "என்னம்மா மழைக்கு ஒதுங்க விழறாப்பல இருக்கீங்க இந்தக் காலப் பொண்ணுங்க. ம்ம்?"

"வேலிக் கம்பித் தடுக்கி."

"அப்படியே விழுந்தாலும் எழ முடியாதபடி இத்தனை வீக்காய் இருக்கலாமா? சமைச்ச சுவடே இல்லையே வீட்ல?"

"நான் மட்டும்தான் வீட்ல அதான்... தூங்கிட்டேன்."

"அதை சுதாகருக்குச் சொல்லு. பொண்ணுங்க புஷ்டியாய் இருந்தாலும் இந்தக் காலத்துப் பசங்க எத்தனைப் பேருக்கு அதுங்களைத் தூக்கி சுமக்க உடம்புல வலு இருக்குது? பசங்களும் தங்களையாய் இருக்காங்க."

"நான் இவங்களுக்கு ஹார்லிக்ஸ் கரைக்கட்டா?"

கேட்ட நல்ல நன்றி கூறி நடித்தான் கதாகர்.

"சூப் போட்டுத் தந்தேதேன் வீட்ல இட்லி சட்னி இருக்கு" "நீங்க கிளம்புங்க டெலிவரி கேஸ் காத்திருக்குதுன்னீங்களே?"

"மழை இப்படிக் கொட்டுதே அம்மா வயித்துல இருக்கிற குட்டி உலகத்தைப் பார்க்கற ஆசை அதிகமாயிடுச்சு போல. உடனே உதைச்சிட்டுக் கிளம்பிடறதுகள்." பக்கச் சொல்லாய் பலஹீனமாய் சிரித்தான்.

"பேட்டலேண் வலி போட்டு பாத்தது நாலு வருஷமா போட்டுருக்கேன். நல்லா சாப்பிட்டு மனசை அலட்டிக்காம ஓய்வெடு என்ன?"

அதட்டலுடன் கிளம்பினார் வைத்தியர்.

அவரைத் தொடர்ந்து வெளியேறிய கதாகர் பத்தாம் நிமிடம் ஆவி பறக்கும் சூப் கோப்பையுடன் மறுபடி அறைக்குள் நுழைந்தான்.

எழுந்து உட்கார முயன்றான்.

தலை பத்தாய் வலித்தது. உள்ளாடை ஏதுமின்றி வெறுமே தன் சிகப்பு லங்கிக்குள் [illegible] இருப்பது புரிய மறுபடி கலுக்கொடு படிக்க முயன்றான்.

இப்போது பதம் "கிண்"ணென்று தெறித்தது.

"அம்... அய்ய..."

கோப்பையை மேசையில் வைத்து விட்டு இவனை ஒரு குழந்தை போல பதமாய் தூக்கி கட்டிலில் சாய்த்தாற் போல அமர வைத்தான். அவன் லைக்கர் படுக்கை விரிப்பை இறுக்கமாய் தன் கழுத்தோடு சேர்த்து பிடித்துக் கொண்டிருந்தான்.

"நம் நான் உனக்கு உடை மாற்றினாங்க. நான் எனக்குக் கிடைச்சதை எடுத்துத் தந்தேன்."

அவனைச் சமாதானப்படுத்தும் தொனியில் கூறியபடி இரு தலையணைகள் அவன் மடியில் அடுக்கி அதன் மேலே வைத்தபடி வைத்து அதில் சூப் கோப்பையை வைத்தான்.



சூப்பின் வாசனை அபாரமாய் இருந்தது.

வயிறு 'தா தா' என்று உறுமியது.

"தாங்க்ஸ்."

"பரவாயில்லை. எதுக்கு மழையில் வெளியே வந்தே?"

அவன் தன்னைக் கேள்வி கேட்டது அவளுக்கு ரசிக்கவில்லை என்றாலும் தன்னைக் காப்பாற்றிய உரிமையுண்டு என்பதால் பதில் சொன்னாள்.

"நாய்க் கூண்டின் கதவுங்க திறந்திருந்தது. உள்ளே ஈரம் போகுதேன்னு மூட வந்தேன்."

"நாய்ங்க அப்படிக் குலைக்கலைன்னா நான் வந்து பார்த்திருக்க மாட்டேன்."

"ம்ப்ச்..."

"குடிப்பாக் குடி."

ஸ்பூனைப் பிடிக்கவும் தெம்பின்றி நடுங்கின அவள் விரல்கள்.

"நான் தரவா?"

"வேண்டாம்" - சற்று காட்டமாகவே சொன்னாள்.

"ஏதேனும் சாப்பிட்டால் நான் டாக்டர் தந்திருக்கற மாத்திரைகளை போட்டுக்க முடியும். வலி மட்டுப்படும்."

"சாப்பிடறேன்."

இப்போதும் எரிச்சலாகவே சொன்னாள்.

"சரி. சாப்பிடு."

என்றவன் அருகிலிருந்த பிரம்பு நாற்காலியில் அமரவும் சிடுசிடுத்தாள்.

"நீங்க போங்க."

"நீ சாப்பிட்டதும் மாத்திரையைத் தந்துட்டு இட்லியை எடுத்து வரேன். கீழே சிந்திட்டா? அதான் இருக்கேன். சாப்பிடு."

மேலே பேசும் திராணி அற்று சூப்பைப் பருகலானாள். சூடும் சுவையுமாய் அது அவளுக்குள் இறங்க இறங்க தெம்பேறியது போலிருந்தது.

காலி கோப்பையை எடுத்தபடி எழுந்தான்.

"படுத்துக்கறியா.. உட்கார்ந்திருக்கியா?"

ஒரு மூன்றாம் நபரிடம் கேட்பது போலிருந்தது அத்தொனி.

"ம்ப்ச்" என்றாள் வேறு பக்கமாய் பார்த்து.

மாத்திரையைத் தந்து வாயைத் துடைத்தவன்,

"நான் வர பதினைஞ்சு நிமிஷமேனும் ஆகும். படுத்துக்கோ." என்று அவளைப் படுக்கச் செய்தான்.

வலியில் முனங்காதிருக்கப் பல்லை கடித்தவள்,

"நீங்க மெள்ளவே வரலாம். ஏன் தொந்தரவு? வர அவசியமில்லை.." என்றாள் வீம்புடன்?

இது வெட்டி வீம்பு என்று உள்ளுக்குள் உணராமலும் இல்லை.

"உனக்கு சாப்பாடு போக, என் டிரஸ், பேப்பர்ஸ் எல்லாம் எடுத்திட்டு வரணும்.. அதான்.."

"அதெல்லாம் எதுக்கு?" புருவங்களை சுழித்தாள்.

"பக்சர் திரும்பும் வரை நான் பக்கத்து ரூம்ல. அதாவது ஹால்ல தங்கப்போறேன். அதான்."

வெளிப்பேசியவனை உண்மையான கையாலாகாத்தனத்துடன் முறைத்தபடி கிடந்தாள் அவள்.



## 13

அரைத் தூக்கத்தில் அவள் கிறங்கியிருக்க, நர்ஸ் இருமுறை வந்து அவளுக்கு பெட்-பேன் வைத்துப் போனாள். ஏதோ மருந்தும் சூடான திரவங்களும் புகட்டப்பட்டன.

"மருந்து எபெக்ட் அசத்தும்மா. தூங்கு... இன்னைக்கு ஏறக்குறைய கழிஞ்சிருச்சு.. நாளை வலி குறைஞ்சிடும்.. நாளை க்ரட்ச்சஸ் எடுத்துட்டு வரேன்.. தாங்கி நடந்தால் நீயே பாத்ரூம் போய்க்கலாம். காலைல வந்து உடம்பு துடைச்சு விடறேன் குட்-நைட்.."

அரை முழிப்பில் தலையாட்டி நன்றி தெரிவித்தாள்.

"எல்லாம் அந்த தம்பி யோசிச்சுச் சொல்றதுதான்... என்னைக் கூட்டி வர ஆட்டோவும் ஏற்பாடு பண்ணிருந்தாங்க.. கரிசனையான பிள்ளை.."

பிராணிகளுக்கு உணவு தயாரிக்கப்படுவதைக் கிளம்பிய வாசனையிலிருந்து புரிந்து கொண்டாள்.

அவள் யோசனைகளை உணர்ந்தது போல உடனுக்குடன் செய்தான். மறுநாள் திட உணவை வற்புறுத்தி உண்ண வைத்தான்.

வீடு பெருக்கப்படும் சத்தம் கூட கேட்டது.

இப்படி எல்லாவற்றையும் அவன் இழுத்துப் போட்டு செய்ய அவசியமில்லை. போய் பாட்டியை அழைத்து வந்திருந்தால் போதும்.

அதையும் லலிதா சொல்லாமல் இல்லை.

"எல்லாம் நன்மைக்குத்தான்னு நினைக்கறேன். இந்தக் கடும் மழை, குளிரில் பக்சர் இங்கே இருந்திருந்தால் மூட்டுவலி

அதிகமாயிருந்திருக்கும். உன் வேதனையைப் பார்த்துத் தாங்கப் போயிருப்பாங்க. உடனே இங்கே வந்து அவங்க செய்ய வேண்டியது எதுமில்லை." என்று கூறி விட்டான்.

"உங்களுக்கு...?"

"எனக்கும் சிரமமில்லை."

"டாக்டரும் நர்ஸ் வேற வந்து-"

"அவங்க எப்படியும் வந்துதானே தீரணும்... டிரஸ்ஸிங் மாத்தணுமே... புண் சீக்கிரமாய் ஆறுதாம். இன்னைக்கு அத்தனை வலி இல்லை போல...?"

"ம்ம். குறைஞ்சிருக்குது..."

அத்தனையும் உணர்ச்சிகளற்று பொதுவாய் பேசியதுதான். இரண்டாம் நாள் மாலை தன் உடம்பு தேறியிருந்ததை அவளால் நன்கு உணர முடிந்தது.

எப்போது நடக்கலாம் என்று தவிக்கும் அளவிற்கு தெம்பாகி இருந்தாள். நர்ஸின் உதவியுடன் மேனியைத் துடைத்து ஒரு சேலைக்கு மாறியிருந்தாள்.

மிகக் கவனமாய் இவள் கூந்தலைச் சிக்கெடுத்து பின்னி விட்டாள் நர்ஸ்.

"ஒரேடியாய் தலை சிக்காகவும் விடக்கூடாதும்மா... என்னை பிறகு பிடிச்ச இருந்தால் காயம் மறுபடி பிரியும்..."

பளிச் புரிய முகம் வெளிறியிருப்பதாய் பட... கண்களுக்குள் துளி மைத் தடவினாள்.

மின்சாரம் போயிருந்தது.

ஆக டிவியை ரூமின் மறுபக்க மூலைக்கு மாற்றியிருந்தான் சதாசிவன். கட்டிலில் இவள் படுத்தபடியே பார்க்கத் தோதாய்.

இவளுக்கு இரவு உணவைத் தந்தபடி



"நாளைக்கு காலை நர்ஸை உன்னோட வந்த சிவமணி நேரம் தங்கக் கேட்டிருக்கேன்... மழை ஓரளவு நின்னாச்சு... அதனால் டிச்சரை அந்நேரம் போய் கூட்டிட்டு வந்துடறதாய் இருக்கேன்."

'யப்பாடா' என்றிருந்தது லலிதாவிற்கு.

அவன் எத்தனை கரிசனையாய் தன்னைக் கவனித்தான் என்றாலும் அதுவே முள்ளாகவும் குத்துகிறதே...!

அம்மா மட்டும் இப்போது இங்கிருந்திருந்தால் அவள் தன் வாழ்நாளின் பெரும்பகுதி கரித்துக் கொட்டிய எதிரி சாலமோனின் மகனுடன் தன் ஒரே மகள் தனியே தங்க நேர்ந்ததில், அதுவும் அவன் தயவில் பாதுகாப்பில் அவள் இருக்க வேண்டியது கண்டு கொதித்திருப்பாள்... காச்மூச் என்று கத்திப் புலம்பியிருப்பாள்.

தன்னால் சதாசிவின் மகிழ்ச்சி எல்லாம் போகிறது என்ற சுயபச்சாதாபம் வேறு இருக்கியது - நர்ஸ் நேற்றே கேட்டாள்-

"யாரும்மா அது ஷாலினி?"

"ம்ம்... தெரிஞ்சவங்க."

"இப்ப வந்து சதாசிவ் சாரை எங்கேயோ வரச் சொல்லிக் கேட்டாங்க... அவருக்கு வந்துதே ஆத்திரம்... அந்தப் பொண்ணு கையைப் பிடிச்சு தரதரன்னு வெளியே இழுத்துப் போட்டுட்டாரு... லலிதாவை விட்டுட்டு இப்ப மட்டுமில்லை எப்பவும் வர முடியாதுன்னு ஒரு கூச்சல் போட்டாரு பாரு- அந்தப் பொண்ணு ஓடியேப் போச்சு..."

இவளுக்குள் குறுகுறுப்பு அதிகமானது.

அம்மாவின் நினைப்பும் சேர, துக்கம் தொண்டையை அடைத்தது. அம்மா பெரிய குணவதி இல்லை... எதிலும் தன்னம்பிக்கையுமான ஆதர்ச பெண்மணி இல்லை.

ஆனாலும் தன்னைப் பெற்றவள்-தனக்குத் தெரிந்த வகையில் அன்பு காட்டி வளர்த்தவள்.

மகள் இப்படி அடிபட்டு கிடப்பதைப் பார்த்தால்.

"ஏன்டி சனியனே கவனமாய் நடக்கக் கூடாதா? என ஓடவோ" என்று திட்டினாலும் அடிக்கடி அருகமர்ந்து தலையைக் கோதி விட்டிருப்பாள்—உணவை ஊட்டியிருப்பாள்.

இவள் சாப்பிட்ட தட்டை எடுக்க வந்த சுதாகர் இவள் துடைக்கும் முன் வழிந்த கண்ணீரைக் கவனித்து விட்டான்.

"என்ன வலி அதிகமாயிருக்குதா?" குரலில் கலவரமிருந்தது.

"ம்ப்ச்" உதடு சுழித்தவளின் கண்ணீர் பெருகியது.

"என்ன?"

"இப்பவே பாட்டி வந்தால் தேவலை..."

"இப்ப... ராத்திரி நேரம் போனால் என்ன ஏதோன்னு பதறுவாங்க. ரெண்டு நாளும் நல்லவேளை மதியம் போன் வந்ததால நீ கோழிக்குத் தீனி வைக்கறதாய் சொல்லி சமாளிச்சேன்.. நாளை காலை வந்திடுவாங்க..."

"ம்ப்ச்.. இப்படி ஒரு இக்கட்டில் சிக்குவேன்னு நினைக்கலை."

"அழுதால் இக்கட்டு குறையுமா இல்லை கரையுமா?"

அவன் புன்னகையில் சிறு குறும்பு இருந்தது.

"உங்களுக்குப் புரியாது... கடின மனக்காரங்களுக்கு கண்ணீர் புரியாது."

"பெண்களுக்கு அது ஒரு ஆயுதம்ங்கறது புரியும். ஆனால் கண் பை போட்டுட்டு ஏன் அழுறும்ங்கறது புரியலை தான்."

அவன் சற்று அலட்சியமாய் சொன்னது போலிருக்க அவளுக்குள் ஆத்திரம் எழுந்தது.

"சேவல் மாதிரி இருக்க வேண்டாமேன்னு போட்டேன். கேட்டுக்கும் இல்லை..."



"சாரி... தவிர லலிதா.. நான் நம்ப அப்பாமாவைப் பத்தி பேசாமல் இருந்தது உனக்காகத்தான்... நீ மன்னிக்க தயாராகலைன்னாங்க டீச்சர்."

"ஆக ரெண்டு பேரும் சேர்ந்து சதியாலோசனை நடத்தியிருக்கீங்க."

"உன்னை அவங்க மூலம் புரிஞ்சிக்க முயன்றேன்... அவ்வளவு தான்.. மன்னிப்பு எனும் வார்த்தையே உன்னை எரிச்சல்படுத்துதுன்னா..."

"பாதிக்கப்பட்டவர்களுக்குத்தான் வேதனை புரியும்... மன்னிப்பெல்லாம் சும்மா..."

"இல்லை லலிதா... மன்னிக்கணும்... அப்பதான் நாம சுத்தமாய், சந்தோஷமாய் இருக்க முடியும்.. என்னால மன்னிக்க முடிஞ்சதாலதான்..."

அவளது புருவங்கள் சுருங்கின.

"இதென்ன புதுக்கதை?" என்றாள் சற்று இளக்காரமாய்.

"எங்கப்பா தப்பு செய்ததாய் நினைக்கறதால உனக்கு என்மேல் ஆத்திரம். அதே போல உங்கம்மாவின் தப்புதான் இந்த எல்லாக் குழறுபடிகளுக்கும் மூலக்காரணம். ஆனால் நான் உன்னை அதற்குப் பொறுப்பாக்க நினைக்கலை... மன்னிக்க.. முழுசாய் மறந்திட.. முயற்சி பண்றேன்..."

"இப்பத்தான் ஞாபகம் வருது... நீங்க எழுத்தாளர் இல்லையா? இட்டுக்கட்டுக் கற்பனையைப் பின்றீங்க."

"நான் கற்பனை செய்து கதை பண்றவனில்லை... அது உனக்கேத் தெரியும். நிஜங்களைப் பதிவு செய்றதுதான் என் எழுத்து."

"உங்கப்பாவின் சாமர்த்தியம் உங்களுக்கும் வந்திருக்குது"

சற்று கோபமாகவே இதைச் சொன்னாள்.

அந்தத் தொனி அவனுள் இருந்த கனலை ஊதி விட்டது

"உங்கம்மாவின் சாகசங்களை நீயும் தெரிஞ்சு வச்சிருக்கியா லலிதா?" மிக மெள்ளத்தான் கேட்டான் என்றாலும் அடி ஆழம் இறங்கியது.

"என்ன சொல்றீங்க? எங்கம்மா என்ன சாகசம் செய்தாங்க?"

"யார் பெரும் பணக்காரனோ அவனுக்கு தன் மனதை மாற்றக் கூடிய சாகசம்.. நீயும் அப்படி மாறிடுவியா?"

அவளது தலை முழுக்க ஏதோ ஒரு விசித்திர சூடு பரவியது. மை கலைந்த விழிகள் தணலாய் சிவந்தன.

"உங்கம்மா செய்ததை எல்லாம் நீ தெரிஞ்சுக்கணும் லலிதா.. முக்கியமாய் இதை நீ தெரிஞ்சுக்கும் போது ரொம்ப வேதனைப்படுவேன்னுதான் நான் இந்தப் பேச்சையே எடுக்கலை. ஆனால் முழுக்கதையும் தெரிஞ்சால் உனக்கு மன்னிக்கறது சுலபம்ன்றதால் சொல்றேன்.."

அவன் பொய் பேசவில்லை என்பது நிச்சயம்.

ஆனால் அவன் சொல்வதைத் தாங்கும் பலம் தனக்கில்லை என்பது தெரிந்தாலும் தன்னை திடப்படுத்திக் கொண்டாள்.

"எங்கப்பா கோரமானவர், கயமைத்தனம் உடையவர்னு நீ நினைப்பது முழுக்கத் தப்பில்லை... ஆனால் அவரை அதற்குத் தூண்டியது.. உங்கம்மா தான்."

மறுக்க நினைத்தாலும் லலிதாவிற்கு வார்த்தைகள் வரவில்லை. மூலிகைக்குக் கட்டுப்பட்ட நாகம் போல ஒரு பிரமிப்பில் இருந்தாள்.

"உனக்குத் தெரிஞ்ச பக்கம், உங்கம்மா உனக்குக் காட்டியது தான் லலிதா. எல்லாவற்றையும் போல் அதற்கு மறுபக்கம் உண்டு.. உங்கம்மாவை முதல்ல பெண் பார்த்து பேசி முடித்தது எங்கப்பாக்கு. அப்போது உங்கம்மா கல்லூரி படிப்பை முடிக்கலை. கடைசி வருஷப் படிப்பு. கல்யாணம் நிச்சயமான



குஷியில் எங்கப்பா காலேஜ் வாசல்ல தவம் கிடக்க ஆரம்பிச்சாராம்.."

அவள் முக திகைப்பைப் பார்த்து சற்று தயங்கினான்.

"எங்கப்பா இதை எல்லாம் மனம் விட்டு பேசும் ரகமில்லை.. தாத்தாதான் என்னிடம் சொன்னார்.. விளக்கினார்."

"சொல்லுங்க.."

"தினம் பார்க்க, பேசன்னு இருந்திருக்காங்க... எங்கப்பாவுடைய நண்பர் தான் தர்மராஜ். அதாவது உங்கப்பா.. ரெண்டு பேரும் என்ஜினீயரிங் காலேஜ்ல உடன் படிச்சவங்க. சில தடவைகள் அப்பாவோட வந்து உங்கம்மாவைப் பார்த்த உங்க அப்பாவிற்கு அவங்களைப் பிடிச்சு போக.. வேறு விதமாய் அவங்களை ஈர்க்க முயற்சி செய்திருக்கார்.. அப்பவே குடும்ப உதவியுடன் அவர் பிஸினஸ்ல உற்பத்தி செய்ய ஆரம்பிச்சு பணப்புழக்கத்தோடு இருந்திருக்கார்.. விதவிதமான டிரஸ், பைக், கார்னு வந்த அவரை உங்கம்மா.."

"இது பொய்.."

"உண்மை. இதெல்லாம் உங்க பாட்டிக்கும் தெரியும். ஏன்னா உங்கம்மா நிச்சயிக்கப்பட்ட சாலமென் வேண்டாம், நான் தர்மராஜைத்தான் கல்யாணம் செய்யப் போறேன்னு சொல்ல குடும்பத்திலே குழப்பம். ஆளாளுக்கு உங்கம்மாவிற்கு புத்தி சொல்ல. அதில் மச்சரும் ஒருத்தர்.."

'வேற்று ஜாதிங்கறதைத் தவிர இவருக்கென்ன குறை? தர்மராஜும் கிறிஸ்டியன். சாலமெனைவிட அதிகம் சம்பாதிக்கும் சாமர்த்தியசாலி... எனக்கு அவரைத் தான் பிடிச்சிருக்குதுன்னு' உங்கம்மா பிடிவாதமாய் தர்மராஜைக் கல்யாணம் செய்துக்கிட்டாங்க?

மடிமீது ஒரு தலையணையை வைத்து அதை இறுகப் பற்றியிருந்தாள் லலிதா. அந்த திகைப்பில் உறைந்திருந்தது அவள் முகம்.

## 14

"ஸாரி லலிதா... டிச்சர் வந்த பிறகு நாமெல்லாம் நிதானமாய் உட்கார்ந்து பேசவோம். இப்ப இப்படி நான் அவசரப்பட்டு சொன்னது தப்பு. அதுவும் உன் உடல்நிலை இப்படி இருக்கும் சமயத்தில். படு."

"நீங்க சொல்றது உண்மைதானா?"

"ஆமாம்."

"அப்ப மேற்கொண்டு சொல்லுங்க."-உத்தரவிட்டாள்.

"எங்கப்பாவால தன் நண்பனும் தனக்கென்று நிச்சயிக்கப் பட்ட பெண்ணும் சேர்ந்து தன்னை ஏமாற்றியதைத் தாங்க முடியலை. அந்த வெறிதான் அவரை அசுரத்தனமாய் உழைக்கத் தூண்டியது. உங்கம்மா மீதிருந்த பிரியம் அல்லது அவங்களை இழந்த வேதனைதான் அப்பாவுடைய வெற்றிக்கு ஆதாரம்னே சொல்லலாம். அவங்க முன்னே நான் பெரிய ஆளாகணும்ற உத்வேகத்துல உழைச்சகிட்டு மேலேறினார். உங்க பிள்ளையைப் போட்டுவிட்டு தடுமாறச் செய்தது தப்புதான். ஆனா கண்மண் தெரியாத வேகத்தில் இருந்தார். எதுவும் தப்பாய் தோன்றாதளவு வெறி. வெற்றியை மட்டுமே குறிவைத்த மூர்க்கம் அந்த மூர்க்கத்தைத் தாங்க முடியாத உங்கப்பா தப்பான முடிவுக்குப் போயிட்டார்."

"போயிடுங்க" கேவினாள்.

"மன்னிச்சிடு லலிதா. இதனைத்தான் நான் சொல்லவை."

"இதுக்கு மேல என்னால முடியாது. நீங்க எங்கப்பா அம்மாவை பழிக்கறதைக் கேட்க முடியாது."

"இது பழி இல்ல. அவங்க வாழ்க்கை."



"உங்களுக்கும் உங்கப்பாவின் அதே வெறி. மூர்க்கம் இருக்குது..."

திகைப்பாய் பார்த்தான்.

"விளைவு என்ன ஆனாலும் பரவாயில்லை. தன் காரியம் வெற்றியடைணும்ற வெறி" கத்தினாள்.

"நீ தப்பாய் புரிஞ்சுகிட்ட லலிதா..."

"இல்ல இப்பதான் எல்லாம் சரியாய் புரியுது. நல்லவேளை இப்பவாவது புரிஞ்சுதே. போயிடுங்க."

மெள்ள வெளியேறினான்.

விட்டத்தை வெறித்தபடி மல்லாந்து படுத்தவளின் கண்ணீர் பக்கவாட்டில் வழிந்து காதுகளுக்குள் தேங்கியது.

உறைந்த உணர்வுகள் படிப்படியாய் தளர்ந்தன. புத்தி செயல்பட ஆரம்பித்தது. லலிதா அவள் பெற்றோருக்கு பத்து வருடங்கள் கழித்துப் பிறந்தவள். அதுபற்றி அம்மா பிறரிடம் பேசும்போது, 'எனக்கு அஞ்சு வருஷமானதுமே வெறுத்திடுச்சு. இனி பிள்ளை பாக்கியம் இல்லைன்னு முடிவு பண்ணிட்டேன். இவருக்கும் தொழில்ல நாட்டம் குறைஞ்சு. யாருக்காக நான் சம்பாதிச்சு சேர்க்கன்ற சலிப்பு. இது சாபம்னுதான் நினைச்சோம். சாபம் நீங்க அத்தனை கோவில்களுக்குப் போனோம். முழங்கால்லயே நின்னு கண்ணீர் வடிச்சேன். பிறகு சாபம் நீங்கி கிடைச்சவதான் லலிக்குட்டி.'

அப்படி அம்மா சாபம் என்று குறிப்பிட்டது இதையா? நான் செய்த பாவத்தின் பலனைத்தானா?

ஆனால் இதனால் மனமுடைந்த சாலமென் ஒன்றும் சாமியாராகி விடவில்லையே? சுதாகர் சொன்னவை மறுபடி அவள் மனதில் ஓடின. 'முப்பது வயசானதும் அப்பா கல்யாணம் செய்துகிட்டார். அம்மா ஏழைக் குடும்பத்துப் பெண். எளிய ஆசைகள்தான். ஆனால் அதெல்லாம் பணமிருந்தும் கூட அம்மாவிற்கு நிறைவேறலை. ரெண்டு நாள் குற்றாலத்துக்குப் போகலாமாங்க? என்று அம்மா கேட்டால் 'சசபட்டி பிஸினஸ்

மூலிகை எண்ணெய் தடவிய டாப்டி பீப்பின். பிரான்ஸ்லை ஜூலர் போயேன். அருமையான இடம் ' இவர் அப்பா. அவங்க எங்கேயும் சேர்ந்து போனதில்லை. உறவினர் கல்யாணங்களுக்குக் கூட அம்மா தனியேப் போறதுதான். அப்பாவுக்கு வேலையைத் தவிர வேற காதலில்லை. ஆனால் அவரும் இளமையில் எளியவராய் இருந்ததாய் தாத்தா சொல்லியிருக்கார்.

அப்படியிருந்த மனுஷனை முடக்கி கள் குடிக்கு குதிரையாக்கியது தன் அம்மாதானோ?

அதற்கான பலனை இன்றும் சந்ததிகள் அனுபவிக்கிறார்களோ?

பாட்டிக்கு போன் செய்து பேசலாமா? நாளை நேரில் பேசிக் கொள்ளலாம். சுதாகர் பொய் சொல்லவில்லை என்பது நிச்சயம்.

யோசித்தால் இவை பரஸ்பரம் மன்னிக்க, மறக்க வேண்டிய கசப்பு சம்பவங்கள். அம்மா இத்தனைக் காலமாய் ஒரே கோணத்தில் சொல்லி சொல்லி மனதை உருவேற்றியிருந்ததில் தன் பார்வையே கோணலாகியிருந்தது. இப்போது மறுகோணத்திலிருந்து பார்க்க தலை சுற்றுகிறது.

ஆழ்ந்த தூக்கமும் கிடைக்கட்டும் என்ற நோக்கில் வலியை மட்டுப்படுத்தும் மாத்திரையை ஒன்றுக்கு இரண்டாகப் போட்டவள் கண்ணீர் பிசுபிசுத்த முகத்தோடு தூங்க முயன்றாள்.

உடல், உள்ளத்தின் வேதனைகளை மழுங்கடிக்கும் உறக்கம் அவளை இரக்கத்துடன் வந்து தழுவிக் கொண்டது.

பெரிய இடி சத்தம் அவளைத் தட்டி எழுப்பியது. அதிகாலை மணி ஐந்து என்றது கடிகாரத்தின் ஒளி முட்கள். ஆனால் இன்னும் தன் மீதிருந்த கறுப்புப் போர்வை விலகாததால் அறையினுள்ளே முடங்கிக் கிடந்தது வானம்.

கட்டிலை விட்டிறங்கியவள் விந்தி விந்தி குளியலறைக்குப் போய் தன்னைப் புதுப்பித்துக் கொண்டாள். சூடான தேநீருக்கு



நாக்கு கெஞ்ச சமையலறைக்குப் போனாள். போகும்போதே ஓரக்கண்ணால் ஹாலில் சுதாகர் படுத்திருக்கும் இடத்தை நோட்டமிட்டாள். படுக்கைக் காலியாகக் கிடந்தது. வீட்டின் பிற பகுதிகளில் மின் வெளிச்சமுமில்லை. ஆக சுதாகர் இங்கில்லை. தன் வீட்டிற்குப் போய் விட்டானோ? தான் எகிறியும் கத்தியும் தழைந்தேயிருந்த அவன் குரலும் முகமும் நினைவிற்கு வந்து இம்சித்தன.

இருவரின் பெற்றோரும் குற்றம் செய்தவர்களே. யோசித்தால் தன் தாயாரின் தவறுதான் ஆரம்பம்.

அதன் பிறகு மற்றத் தவறுகள் சங்கிலியாய் தொடர்ந்திருந்தன. அம்மா செய்ததில் மிகப் பெரிய குற்றம், தன் பக்கக் குற்றங்களை மறைத்து மற்றவற்றைப் பெரிதாக்கி மகளின் மனதைப் பாழடித்தது.

பரோபகாரம், மன்னிப்பு, கருணை இவையெல்லாம் பெரும்பாலும் பெற்றவர்களைப் பார்த்தே பிள்ளைகள் பழகும் வாழ்க்கை முறைகள் அல்லவா? வெறுப்பை, ஆங்காரத்தை மட்டுமே பிரதானமாய் அம்மா தனக்குக் கற்று தந்து விட்டார்களோ?

இப்படியே தொடர்ந்தால் வாழ்க்கை வெகு சிக்கலாகி விடும். பலரை துவேஷத்துடன் பார்க்க பார்க்க, நாட்கள் நரகமாகும். இந்த சிந்தனையுடன் தனக்குத் தேநீரை தயாரித்துப் பருகியவள் பின் வாசலைத் திறந்தாள். சுதாகரன் முன் வாசல் வழியே போயிருக்க வேண்டும். அதற்கான ஒரு சாவி அவனிடம் இப்போது இருக்கிறது.

மசமசப்பான அரை இருளில் தெரிந்த காட்சி அவளை உலுக்கியது. அலறத் திறந்த வாயிலிருந்து சத்தம் கிளம்பவேயில்லை. அவள் அஞ்சியது போலவே நாய் கூண்டுகளை மேட்டின் மண் சரிந்து மூடியிருந்தது. அங்கு கூண்டு இருந்ததின் அறிகுறியே இல்லாமல் ஒரு ஈர மணல் மேடு மட்டும்.

டாமி, ரெக்ஸ், ஜிம் மூன்றும் அதனுள் உயிரோடு சமாதியாகி விட்டனவா? ஊன்றுகோல்களை வேகமாய் வீசி

புன்னகைத்தால் செய்வோம்.''

''இதையும் புன்னகைத்து பொருட்களை ஏற்றியவள் கட்டடைகளை வீசிப் [illegible] போட்டு நடக்க ஆரம்பித்தாள்.

அவற்றை இறக்கைகளாக்கிப் பறக்க மாட்டோமா என்ற வேகம்.

அடைசலான அறையில் நடப்பதை விட வெளியே நடப்பது எளிதாயிருந்தது. எல்லாவற்றையும் விட மன்னிக்கும் மன்னிப்பு கோரும் துடிப்பின் வேகம் வேறு.

''ம்மா, சைக்கிள்ல ஏறுங்க... எதயாவது போட்ட காலு விளையாட்டுல்ல இப்படி மழைல வாரதே தப்பு. இதெல்லாம் நானே எடுத்துட்டுப் போகமாட்டேனா?''

''எனக்கு அவரைப் பார்க்கணும்.''

''உடனே வரச் சொல்லுறேன்.''

''ம்ஹூம்.''

வழக்கமாய் பஸ்வேன் இருக்கும் இடத்தில் இன்று வலிய ஏறி அமர்ந்தாள்.

மன்னிக்க தயாரானதுமே உள்ளமும் உடலும் வேகத் [illegible]!

இனியும் சுதாகருக்கு அதைத் தெரியப்படுத்தாமல் இருக்காதே என்ற அவசரம்.

நான்கு கட்டடைகளை மார்போடு அணைத்துக் கொண்டவளை மழை இந்தப் பக்கம் சற்று பலக்கப் பொழிந்தது.

தொப்பலாய் நனைந்து பத்து நிமிடங்களில் பேரிப்பள்ளம் வந்து சேர்ந்தாள்.

அந்த ஏரியா முழுக்க மூர்க்கத்தனமாய் குளிப்பாட்டப்பட்டது போல செம்மண் பரிதாபமாய் நின்றது. ஓடையாய் பெருகி ஓடியது மழைநீர்.



நிலைகுலைந்த மேட்டின் சரிவெங்கும் ஆட்கள் மீட்பு வேலையில் மும்முரமாயிருந்தார்கள். அத்தனை ஆள்களிலும் அவன்... சுதாகர் தனித்துத் தெரிந்தான்.

உத்தரவுகளைப் பிறப்பித்தபடியே தானும் விழுந்த ஒரு பெரும் மரத்தை அகற்ற வெட்டிக் கொண்டிருந்தவனை முதன் முறையாய் பார்ப்பது போலப் பார்த்தாள்.

மழைநீர் முகத்திலும் வழிந்து பார்வையை மங்கலாக்கியது.

ஆனால் மனம் தெளிவாகியிருந்தது.

நல்லப்பன் காபி, பன், பழங்களை விநியோகம் செய்ய ஆரம்பித்திருக்க, அவரைச் சுற்றி கூட்டம் குழுமியது.

ஆனால் சுதாகரின் முனைப்பு திசை திரும்பவில்லை.

ஆக வயிற்றை எக்கி கூப்பிட்டாள்.

''சுதாகர்...''

சுண்டப்பட்டது போல திரும்பினான்.

பிடித்திருந்த நான்கு கட்டடைகளை நழுவ விட்டுவிட்டு அவனுக்காய் கைகளை விரித்தாள்.

நமக்கு இடையே இனி ஏதும் வராது என்று அறிவித்த அழைப்பு அது...

ஆவலாய் சரிவில் இறங்கி அவளை நோக்கி ஓடி வந்தான் சுதாகர்!